பக்கங்கள்: பதது

..gistered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | பங்குனி 20 | வெள்ளிக்கிழமை | (02-04-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 105

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## கிழக்கு மாகாணத்தில் பதற்ற சூழ்நிலை

# மட்டு.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் வெளியேற்றம்!

## மருத்துவப் பணிகள் ஸ்தம்பிக்கும் அபாயம்

(மட்டக்களப்பு நிருபர்)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ளபதற்றமான நிலையை அடுத்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பணிபுரிந்துவந்த வெளிமாவட்ட வைத்தியர்கள் சுமார் 15பேர் அச்சம் காரணமாக வைத்தியசாலையில் இருந்து வெளியேறி தத்தம் சொந்த மாவட்டங்களுக்கு சென்றுள்ளனர். இதனால் வைத்தியசாலைப் பணிகள் ஸ்தம்பிதம் அடையும் அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி என்.தேவராசன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக எழுந்துள்ள அச்சத்தினால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பணிபுரிந்து வந்த சுமார் 15 வைத்தியர்கள் தத்தம் சொந்த மாவட்டங்களுக்குச் சென்றதையடுத்து போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்கள் நேற்று முற்பகல் 11.30மணியளவில் இருந்து நண்பகல் 12.30 மணிவரை அமைதிப் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

சுமார் 1மணிநேரம்வரை நடைபெற்ற அமைதிப் போராட்டத்தையடுத்து மட்டக்களப்பு மாவட்ட போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி என்.தேவராசன் கருத்துத் தெரிவிக்கையில்;

மட்டக்களப்பு மாவட்டத்தின் தற்போதைய பதற்றமான அரசியல் சூழ்நிலையை அடுத்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய வெளிமாவட்டங்களைச் சேர்ந்த ஆறு வைத்திய நிபுணர்களும் 5 வைத்திய அதிகாரிகளும் 4 சிங்கள வைத்திய அதிகாரிகளும் வைத்தியசாலையை விட்டு வெளியேறி தமது சொந்த மாவட்டங்களுக்குச் சென்றுள்ளனர். இதனால் வைத்திய சேவைகள் யாவும் பாதிக்கப்பட்டுள்ளன.

வைத்திய சேவைகள் பாதிப்படைந்ததையடுத்து வைத்தியசாலை ஊழியர்கள் அமைதிப் போராட்டம் ஒன்றை நடத்தி அவர்களுக்கு ஆதரவாக அனுதாப தீர்மானம் நிறைவேற்றியதுடன் அவர்கள் வைத்தியசாலைக்கு மீண்டும் வந்து சேவையைத் தொடரவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வைத்தியசாலையை விட்டு வெளியேறிய வைத்தியர்கள் எவருக்கும் நேரடியான அச்சுறுத்தல்கள் எதுவும் விடுக்கப்படவில்லை என்றும், ஏனையோர் ஒலிபெருக்கி மூலம் வெளியேறுமாறு கூறியதையடுத்தே இவர்கள் அச்சம் காரணமாக வெளியேறியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அச்சம் காரணமாக இவர்கள் வெளியேறிய போது இங்கு இவர்கள் கடமையற்ற வேண்டும்

(10ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றால் வாக்களிப்பு இரத்துச் செய்யப்படும்

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

இன்று நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றால் குறிப்பிட்ட வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பு இரத்துச் செய்யப்பட்டு மறு வாக்குப்பதிவு மேற்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா தெரிவித்துள்ளார்,

வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றால் வன்முறை இடம் பெறும் மாவட்டத்தின் தேர்தல் முடிவுகள் வெளியிடுவதில் தாமதமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு அதிகாரிகள் செல்ல்முடியாத நிலை ஏற்பட்டால் வாக்களிப்பு நிலையங்களில் இருக்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை விரட்டியடித்தல் வாக்களிப்பு நிலையங்களின் வாக்குச் சீட்டுக்களை

(10ம் பக்கம் பார்க்க)

### ஊரடங்கு பிறப்பிக்கப்படலாம்

(கொழும்பு)

இன்று நடைபெறும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் வாக்கெடுப்பு நடந்து முடிந்தகையோடு நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படலாம் எனத் தெரிய வருகிறது.

வாக்கெடுப்பைத் தொடர்ந்து நாட்டில் வன்முறைகள் வெடிக்கலாம் எனக் கருதியே ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந)

# 13வது பாராளுமன்ற பொதுத் தேர்தல் இன்று

## ஒரு கோடி 28லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி

(கொழும்பு)

இன்று நடைபெறவுள்ள 13வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் 24. அரசியல் கட்சிகள் 192சுயேச்சைக் குழுக்கள் ஆகியவற்றைச் சேர்ந்த 5698வேட்பாளர்கள் களம் இறங்கியுள்ளனர்.

இன்று காலை 7மணிமுதல் பிற்பகல் 4.00மணிவரை 10439 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்கத் தகுதியுள்ள ஒரு கோடியே 28 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். 22தேர்தல் மாவட்டத்தில் இருந்து 196 பாராளுமன்ற உறுப்பினர்களையும், அரசியல் கட்சிகள் பெறப்போகும் வாக்கு எண்ணிக்கைக்கேற்ப 29 தேசியப் பட்டியல் உறுப்பினர்களுமாக 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவர்.

அங்கீகரிக்கப்பட்ட 29அரசியல் கட்சிகளின் சார்பில் 3361 வேட்பாளர்களும் 192 சுயேட்சைக் குழுக்களின் சார்பில்

(10ம் பக்கம் பார்க்க)

## தேர்தலை அமைதியாக நடத்த புலிகள்-பொலிஸ் இணக்கம்

### நேற்றைய சந்திப்பில் முடிவு

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலை யாழ். மாவட்டத்தில் அமைதியாகவும் சுதந்திரமாகவும் நடத்துவதற்கு பொலிஸாரும் விடுதலைப் புலிகளும் உறுதி பூண்டுள்ளனர்.

இது தொடர்பான சந்திப்பொன்று நேற்று யாழ் போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழு அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது விடுதலைப் புலிகளின் தரப்பில் தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, யாழ். மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும் இமையவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பொலிஸ் தரப்பில் யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த வணகுருவும கண்காணிப்புக்குழுவின் யாழ்.மாவட்டத் தலைவர் அனிற்றா மற்றும் இங்மார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச)

## பொதுத் தேர்தலை அமைதியாக நடத்த நாட்டு மக்களிடம் ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

இன்று நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை சுதந்திரமாகவும், நீதியாகவும், அமைதியாகவும் நடத்துவதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு நாட்டு மக்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொதுத் தேர்தலை முன்னிட்டு ஜனாதிபதி ஊடகங்களுக்கு நேற்று வெளியிட்டுள்ள செய்தியில்,

சுதந்திரமான தேர்தல் என்பது எமது மக்களின் உயரிய சொத்தாகும். அதுவே நாம் வென்றெடுத்த புனிதமான ஜனநாயக உரிமையும் ஆகும்.

அரை நூற்றாண்டுக்கு மேலாக சர்வஜன வாக்குரிமையை அனுபவித்துவரும் இலங்கைவாழ் மக்கள் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தமக்குள்ள அர்ப்பணிப்பை இன்று இடம்பெறவுள்ள தேர்தலின் ஊடாக மீண்டும் ஒருமுறை நிரூபிப்பார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இன்று இடம்பெறவுள்ள தேர்தலில் எந்தவொரு ஆத்திரமூட்டும் செயலையும் எவரும் மேற்கொள்ளக் கூடாது.

எந்த செல்வாக்கிற்கும் உட்படாது தீர்க்க சிந்தனையோடும் அமைதியான முறையிலும் வாக்காளர்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும்.

தேர்தல தினத்தன்றும், அதன் பின்னரும் சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்கும் வகையில் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளேன். அதற்கான சகல ஆலோசனைகளும் முப்படைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஜனாதிபதி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# சைவ வாழ்வில் அநுட்டானம் உயர்நிலையை அடைய உதவும்

சைவ அநுட்டானங்கள், தற்காலத்தில் பெரும்பாலும் சைவ



மக்களால் கைவிடப்பட்டு வருகின்றன. அவற்றைக் கைக்கொள்வதற்கு, இந்த அவசர உலகத்தில் அவகாசம் இல்லை என்று வேறு காரணமும் கற்பிக்கப்படுகிறது. அவகாசம் நம்மைத் தேடி வராது. நாம்தான் அதைத் தேடி அடையவேண்டும்.

### சைவ அநுட்டானத்துக்கு நேரம் ஒதுக்குங்கள்

எல்லா வேலைகளுக்கு மத்தியிலும் சைவ அநுட்டானங்களுக்கும் சிறிது நேரத்தை ஒவ்வொரு நாளும் ஒதுக்கத்தான் வேண்டும். எதையும் மறவாதவர்களும், சைவ அநுட்டானங்களை மறந்து போதல் என்பது தற்காலத்தில் சர்வ சாதாரணமாகிவிட்டது. சமயம், சமய அநுட்டானங்கள் என்பன அத்துணை முக்கியமானவையல்ல என்று இக்காலத்தவர் கருதுகிறார்கள் போலும்.

சமயத்தையும், சயம அநுட்டானங்களையும், சமய வி[illegible]யங்களையும் கீழ்மைப்படுத்துவதால்

## வெள்ளி நற்சிந்தனை

ஏற்படும் தீமைகள், தீய விளைவுகள் பற்றி இவர்கள் சிந்திப்பதாகத் தெரியவில்லை. முழுக்க முழுக்க உலகியல் விவகாரங்களில் மூழ்கி, ஆன்மீகத்தை அந்நியப்படுத்தும் போது மக்களிடையே நிம்மதியும் அமைதியும் குலைகின்றன. வன்செயல்களும் வன்முறைகளும் தலைதூக்குகின்றன. மனித வாழ்க்கை மிருக வாழ்க்கையாக மாறிவிடுகிறது.

### சமய வாழ்வின் கவசம்

பயிரைக காபபதறகு வேலி இருப்பது போல, மனித வாழ்க்கையைக் காப்பது ஆன்மீகம். ஆன்மீகத்தை வளர்க்க உறுதுணையாகவுள்ளது சமயம். இறை வழிபாட்டினாலும், திருநீறு முதலிய சிவசின்னங்களைத் தரிப்பதாலும், விரதங்களை அநுட்டிப்பதாலும், திருவைந்தெழுத்தை ஓதுவதாலும், சிவனடியார்களின் வரலாறுகளை வாசிப்பதாலும் திருமுறைப் பாடல்களை ஓதுவதாலும், எமது பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டு விடுகிறது. இகபர சுகங்களும் கிட்டுகின்றன. சமயம் வாழ்வின் கவசம் என்பதை மறுத்தலாகாது.

சமயம் என்பது வெறுமனே அறிவோடும் போதனையுடனும் சம்பந்தப்பட்டதன்று. சமயம் ஆன்மாவுடனும், சாதனை மற்றும் அநுட்டானங்களுடனும் சம்பந்தப்பட்டது. நான் இந்த உடம்பு அன்று; நான் ஆன்மா என்பதை எமக்கு உணர்த்துவது சமயம். சமயத்தோடு தொடர்பில்லாதவர்களே ஆசையினால் உந்தப்பட்டு அல்லல்படுகிறார்கள். ஆன்மாவின் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல், உடம்பின் தேவைகளையும் ஆசைகளையும் பூர்த்தி செய்யவே முற்படுகிறார்கள். சைவப் பயிற்சிகள், அநுட்டானங்கள் என்பவற்றினாலேயே இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த முடியும்.

### சைவர்களின்கடமையே அநுட்டானம்

மனிதப்பிறவி கிடைத்தல் அரிது. புண்ணிய வசத்தினால் மனிதப்பிறவியெடுத்த ஆன்மா மேற்கொள்ளவேண்டிய பிரதான சைவப் பயிற்சிகளும் அநுட்டானங்களும் பின்வருமாறு அமைகின்றன. அவையாவன, விரத அநுட்டானம், விபூதி தரித்தல், திருவைந்தெழுத்து ஓதுதல், சிவாலய வழிபாடு, திருவுருவ வழிபாடு, திருமுறை ஓதல், சமய சமூகத் தொண்டுகள் முதலியனவாகும். இவற்றைச் கிரமமாக மேற்கொண்டு வருதல் சைவர்கள் ஒவ்வொருவரினதும் சமயக் கடமையாகும்.

சமயம் என்ற சொல் நன்றாகச் செய்யபபட்டது என்னும் பொருளை

**கலாநிதி**
**குமாரசாமி சோமசுந்தரம்**

உடைத்து. சமய அநுட்டானம் அதன செயல் வடிவமாகும். அநுட்டானம் இல்லாத சமயம், சமயமாகாது. சைவ அநுட்டானங்கள் இல்லாத சைவர்களாகப் பிறந்திருந்தாலும் கூட, சைவர்களாக மாட்டார்கள்.

சைவ அநுட்டானங்களில் ஈடுபட்டு, இறைவனின் திருவருளை நாம் சிந்திப்போமாயின் எமக்கு, "இன்பமே, எந்நாளும் துன்பமில்லை" எனும் உயரிய வாழ்க்கை நிலையை எய்தப் பெறுவோம்.

**" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"** □

## புதிய படகுப் பாதை

(யாழ்ப்பாணம்)

பிரித்தானிய அரசின் கடனுதவித்திட்டத்தின் கீழ், புனர்நிர்மாண அமைச்சினால் (**Ministry of Rehabilitation**), குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக்கும் இடையில் சேவையிலீடுபடுத்துவதற்கென புதிய படகுப்பாதையொன்று (**Ferry**) வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படகுப் பாதையானது 85 தொன எடையினை தாங்கக்கூடியதாகும். (உ)

## ப.நோ.கூ.ச.கிளை இடமாற்றம்

(இணுவில்)

இணுவில் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் இயங்கி வந்த தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கத்தின் கிளை இடமாற்றம் செய்யபபட்டு இணுவில் லக்சுமி தியேட்டர் முன்பாகவுள்ள ஒரு கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. (உ-122)

## நெடுந்தீவு பிரதேச ஓய்வூதியர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஓய்வூதியர்கள் தமக்குரிய ஏபரல் - 2004 மாதத்திற்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதேச செயலகத்திற்கு நேரில் வருகை தந்து பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை பெற வரும்போது ஓய்வூதியர்கள் தமது தேசிய அடையாள அட்டை அல்லது ஓய்வூதியர் அடையாள அட்டையை எடுத்து வரவேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளது. (உ)

# கிராம ராஜ்யத்தின் மூலம் இராம ராஜ்யம் அமைப்போம்

## பா.ஜ.க.வின் கொள்கை விளக்கம்

(புதுடில்லி)

இந்தியாவை அடுத்த 16 ஆண்டுகளில் வளர்ச்சித் துறைக்குப் புத்துயிர் அளிப்பதன் மூலமும் கிராமங்களுடனான இணைப்பு வசதியை மேம்படுத்துவதன் மூலமும் மிகவும் வலிமைவாய்ந்த நாடாக மாற்றப்படும் என்று பா.ஜ.கட்சியின் தொலைநோக்கு ஆவணம் தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் தொலைநோக்கு ஆவணத்தை வெளியிட்ட கட்சியின் தலைவர் வெங்கைய நாயுடு அயோத்தி இராமர் கோவில் விவகாரம் தொடர்பாக நீதிமன்ற உத்தரவுக்குக் கட்டுப்பட்டு இரு சமூகத்தினருக்கும் இணக்கமான சூழ்நிலையில் இராமர் கோவில் கட்டப்படும் என்று கூறினார்.

தேசிய அளவிலான கருத்துத் துணிவுடன் அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டம் கொண்டு வரப்படுமென்றும் அவர் கூறினார்.

ஜம்மு - காஷ்மீரில் உள்ள காஷ்மீர், ஜம்மு, ஜடா ஆகிய மூன்று . பிராந்தியங்களுக்கிடையேயுள்ள ஏற்றத்தாழ்வு அகற்றப்பட்டு அங்கு அமைதி ஏற்படுத்தப்படவேண்டும் என்று இந்த ஆவணத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது கட்சியின் தேர்தல் அறிக்கை அல்ல என்றும் பிரதமரால் வெளியிடப்படவுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் அறிக்கைக்கு பா.ஜ.க. கட்டுப்படுமென்றும் அவர் கூறினார்.

கிராம ராஜ்யத்தின் மூலம் இராம ராஜ்யத்தை மலரச் செய்வதில் கட்சி உறுதியாகவுள்ளதாக அவர் கூறினார். சிறுபான்மையினருக்கு எதிராக பாரபட்சமாக பா.ஜ.க. செயற்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை மறுத்த அவர் அனைவருக்கும் நீதி என்ற இலட்சியத்துடன் தமது கட்சி செயற்படுமென்றார்.

கல்வி, பொருளாதார முன்னேற்றம், அதிகாரம் அளிப்பது ஆகிய மூன்று அம்சத்திட்டத்துடன, சிறுபான்மையினர் நலன் பாதுகாக்கப்படும் என அவர் உறுதியளித்தார்.

'தன்னிறைவு இலக்குடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை 8 சதவீதமாக உயர்த்துவதற்கு இந்த தொலைநோக்கு ஆவணம் வழிகாட்டுகிறது என்று மத்திய நிதி அமைச்சர் ஜஸ்வந்சிங் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

9 ஆண்டுகளுக்குள்ளாகவே நாட்டின் பொருளாதார வளர்ச்சி இலக்கை இரட்டை இலக்கமாக உயர்த்த முடியும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதே டொலருக்கு எதிராக ரூபாவின் மதிப்பு உயர்ந்திருப்பதற்குக் காரணம் என்றும் நிதி அமைச்சர் குறிப்பிட்டார். (து)

### தேர்தல் கருத்துக் கணிப்பு தி.மு.க. எதிர்ப்பு

(சென்னை)

தேர்தல் சமயத்தில் வாக்காளர்களின் எண்ணத்தை மாற்றும் வகையில் கருத்துத் கணிப்பு மற்றும ஆய்வு நடததுவதை உணர்வுபூர்வமாகத் தமது கட்சி எதிர்க்கிறது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியிருக்கிறார்.

இத்தகைய கணிப்புக்களையும் ஆய்வுகளையும் தடை செய்ய முடிவெடுக்கப்படுமானால் அதைத் தி.மு.க. ஆதரிக்கும் என்று சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறினார். (து)

# தமிழ்நாட்டில் 25 தொகுதிகள் பதற்றம் நிறைந்ததாக அறிவிப்பு

(சென்னை)

தமிழ்நாட்டில் 25 தொகுதிகள் பதற்றம் நிறைந்த தொகுதிகளாகக் கண்டறியப்பட்டுள்ளதாக மாநில காவல்துறைத் தலைமை இயக்குநர் ஐ.சி.கோபி தெரிவித்துள்ளார்.

சென்னையில் தேர்தல் ஏற்பாடுகள் குறித்துச் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வாக்குப் பதிவின் போது பாதுகாப்புப் பணியில் மத்திய காவல் படையின் 15 படைப்பிரிவினர் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றார்.

மேலும், 65 துணை இராணுவப் படைப் பிரிவினரை பாதுகாப்புக்காக அனுப்பவேண்டும் என்றும் மத்திய அரசிடம் கேட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக உயர் காவல் துறை அதிகாரிகளுடன் தேர்தல் ஏற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு விடயம் குறித்து ஆலோசனை நடத்தினார். (து)

# அமேதி தொகுதியில் ராகுல் காந்தி

(அமேதி)

மக்களை இணைப்பதே தமது நோக்கம்; பிரிப்பது அல்ல என்று அமேதி தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடும் ராஜவ் காந்தி கூறியிருக்கிறார்.

அமேதித் தொகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட ராகுல் காந்தி செய்தியாளர்களிடம் பேசுகையில், இதயங்களை இணைக்கும் அரசியலையே தான் நம்புவதாகக் கூறினார்.

வளர்ச்சியடைந்த நாடுகள் மேலும வளர்ச்சிநோக்கிச் செல்லத் திட்டமிடும் போது ஏற்கனவே நம் நாடு அடைந்துள்ள வளர்ச்சியில் பா.ஜ.க. திருப்தியடைந்து விட்டது என்றும், இந்தியா ஒளிர்கிறது என்று பிரசாரம் செய்வதற்கு இதுவே காரணம் என்றும் ராகுல் காந்தி கூறினார்.

அமேதி மக்கள் காட்டும் வரவேற்பு மகிழ்ச்சி தருவதாகவுள்ளது என்றும் அவர் கூறினார். (து)

## இந்தியச் செய்திகள்

# நீதிமன்றத் தீர்ப்புக்கு மதிப்பளிக்க வேண்டும் கருணாநிதி

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி இந்தியக் குடியுரிமை பெற்றவர்தான் என்று உச்ச நீதிமன்றம் உறுதிசெய்துவிட்ட நிலையில் அதை மீண்டும் பிரச்சினையாக்கத தேவையில்லையென்று தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி கூறியிருக்கிறார்.

டான்சி நில வழக்கில் முதலமைச்சர் ஜெயலலிதாவை விடுவித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஏற்கும்போது சோனியா காந்தி விஷயத்திலும் அது பொருந்தக் கூடியதே என்று செய்தியாளர் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டில் பிறந்தவர்கள் உயர்பதவி வகிப்பதற்குத் தடைவிதிக்கும் சட்டமெதுவும் இல்லை என்றும், அத்தகைய சட்டம் கொண்டு வரத்தேவையில்லை என்றும் கூறிய அவர், அப்படியொரு சட்டம் கொண்டு வரப்படுமானால் தமது கட்சி அதற கேற்ற முடிவு எடுக்கும் என்றும் கூறினார். (து)

## இந்தியாவின் 'ஆகாஷ்'ஏவுகணை

தரையிலிருந்து புறப்பட்டு 25 கிலோமீற்றர் தொலைவில் வானத்திலுள்ள இலக்கைத் தாக்கும் திறன் படைத்த "ஆகாஷ்" ஏவுகணை நேற்று முன்தினம் ஒரிஸா மாநிலம் சஞ்சிபூரில் இருமுறை வெற்றிகரமாகப் பரிசோதித்துப் பார்க்கப்பட்டது.

இந்தியாவிலேயே தயாரான இந்த ஏவுகணை நவீன தொழில் நுட்பம்கொண்டது. (து)

# காந்தி கனவு கண்ட நல்லாட்சியே பா. ஜ. க. வின் இலட்சியம்

மகாத்மா காந்தி கனவு கண்ட நல்லாட்சி, நிலைத்த அமைதி, முன்னேற்றம் ஆகிய அம்சங்களுடன் நல்ல தலைமையும் மக்களுக்குக் கிடைக்கவேண்டும் என்பதை முன்வைத்தே இந்தத் தேர்தலில் பா.ஜ.க. மக்கள் ஆதரவைக் கோருகின்றது என்று துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி கூறியிருக்கிறார்.

குஜராத் மாநிலத்தில் மகாத்மா பிறந்த ஊரான போர்பந்தரிலிருந்து தமது இரண்டாவது கட்ட "பாரத் உதய்" யாத்திரையைத் துவக்கிய அவர் மாகாத்மா காந்தி பிறந்த இடமான கீர்த்திமந்திருக்குச் சென்றார்.

பின்னர் மக்களிடையே பேசிய அவர், வாஜ்பாய் அரசு மாநிலக் கட்சிகளுடன் இணைந்து செயலாற்றிக் கூட்டாச்சி முறையையும் ஜனநாயகத்தையும் வலுப்படுத்தி உலக அரங்கில் நற்பெயர் பெற்றுள்ளது என்று கூறினார். (து)

# எவரெடி உதைபந்தாட்டப் போட்டிகள்

# யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில்!

இலங்கை உதைபந்தாட்ட சம் மேளனத்தினால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற லீக் முறையி லான 19வயதிற்குட்பட்டோருக் கான "எவரெடி" வெற்றிக்கிண்ணப் போட்டிகளின் ஒருபகுதி யாழ்ப் பாணம் துரையப்பா விளையாட்ட ரங்கில் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

இதற்காக துரையப்பா விளை யாட்டு மைதானம் துரிதகதியில யாழ்.மாநகர சபையினால் சீரமைக் யப்பட்டு வருகின்றது.

யாழ்.உதைபந்தாட்ட லீக் அணி யுடன் கண்டி லீக் அணியினர் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழ மையும் பதுள்ள லீக் அணியினர் 24ஆம் திகதி சனிக்கிழமையும் போட்டியிடவுள்ளனர். பி.ப.4.00 மணிக்கு ஆரம்பமாகும் இப் போட் டிகள் ஒன்றரை மணிநேர ஆட்ட மாக இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 5ஆம் திகதி திங் கட்கிழமை ஏற்கனவே ஒத்திப் போடப்பட்ட யாழ்.பல்கலைககழக அணிக்கும் ஊரெழு றோயல் விளை யாட்டு கழக அணிக்கும் இடையி லான போட்டி பி.ப.4.00மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

அத்தோடு பி.ப.5.00மணிக்கு கலை வாணி அணிக்கும் சென நீக்கலஸ 'பி' அணிக்கும் இடையிலான இறு திப் போட்டியும் தொடர்ந்து ஏ,பி,சி ஆகிய பிரிவுகளில் வெற்றிபெற் றோருக்கான பரிசில் வழங்கும் வைபவமும் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்மாவட்ட விளையாட் டுததுறைப் பொறுப்பாளர் கி.மாதுளன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை பி.ப.4.00மணிக்கும் 5.00மணிக்கும் சென்மேரீஸ் அணி முதல்நாள் போட் டியில் வெலலும் அணியை எதிர்த் தும், சென் நீக்கலஸ் அணி தோற் கும் அணியை எதிர்த்தும் விளை யாடவுள்ளன.

மேலும் எதிர்வரும் 7,10,12,13,ஆம் திகதிகளிலும் பின்வரும் முறை யில் உதைபந்தாட்டப் போட்டிகள வலிகாமம் லீக்கின் 4அணிகளுக் கும் யாழ்.லீக்கின் 4அணிகளுக்கும் இடையில் இவ்விரண்டு போட்டிகள 4மணிக்கும் 5மணிக்குமாக நடை பெறவுள்ளன. இவையாவும் துரையப்பா விளையாட்டரங்கிலேயே இடம்பெறவுள் ளன. (யே)

# பாகிஸ்தானுக்கெதிரான முதல் டெஸ்டில் இந்திய அணி அமோக வெற்றியீட்டியது

இந்தியா, பாகிஸ்தான் அணி களுக்கிடையே பாகிஸ்தான் முல் தான் விளையாட்டரங்கில் நடை



பெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக் கெற் போட்டியில் இந்திய அணி யினர் ஒரு இன்னிங்ஸ் மற்றும் 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை அமோக வெற்றிகொண்டுள்ளனர். இந்த வெற்றி பாகிஸ்தான் மண்ணில் இந்திய அணியினர் பெற்றுக் கொண்ட முதலாவது சிறப்பான வெற்றியாகும்.

போட்டியின் 5ஆவது நாளான நேற்றுக்காலை இன்னிங்ஸ் தோல் வியைத் தவிர்ப்பதற்கு 61ஓட்டங் களைப் பெறவேண்டிய நிலையில் களம் இறங்கிய பாகிஸ்தான் அணியினரின் இறுதி ஒரு இலக் கும் நேற்றுக்காலை மேலதிக 9 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த வேளையில் இ.ரான் பத்தான் வீசிய பந்தை யூசுப் ஜெஹானா ஓங்கி அடிக்க முற்படுகையில் அது மட் டையில்பட்டு உயர ராகுல ட்ராவிட் மிக அழகாக அதனைப் பிடிஎடுத்து இந்திய அணியின் சிறப்பான வெற் றியை உறுதிசெய்தார்.

இந்திய அணியின் தமது முதல் இன்னிங்ஸில் 5விக்கெற் இழப்பிற்கு 675ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தமது ஆட்டத்தை இடை நிறுத்திக்கொண்டனர். இதில் இந் திய அணியின் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர் வீரேந்தர் ஷேவாக் மிகச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 309ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத் திருந்தார். இது இந்திய அணி வீரர் ஒருவர் பெற்றுக்கொண்ட முதலாவது முச்சதமாக அமைந் ததுடன், பாகிஸ்தான் அணிக்கெதி ராக எதிரணி வீரர் ஒருவர் பெற்ற முத லாவது முச்சதமாகவும் அமைந்தது.

சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழக் காமல் 194ஓட்டங்களையும் யுவ ராஜ்சிங் 59ஓட்டங்களையும், அகாஷ் சோப்ரா 42ஓட்டங்களையும் வி.வி. எஸ்.லக்ஸ்மன் 29ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத் திருந்தனர்.

பாகிஸ்தான் அணி சார்பில் எவ ருமே மிகச் சிறப்பாக பந்து வீச வில்லை. முகமட்சமி மட்டுமே 110 ஓட்டங்களுக்கு 2விக்கெற்றுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

பாகிஸ்தான் அணியினர் தமது முதல் இன்னிங்ஸில் 407ஓட்டங் களுக்கு சகல விக்கெற்றுக்களை யும் இழந்தனர். இதனால் இந்திய அணியைவிட 268ஓட்டங்கள் பின் னணியில் இருந்தமையினால் தொடர் துடுப்பாட்ட நிலைக்குத் தள் ளப்பட்டனர். பாகிஸ்தான் அணியின் முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டத் தில் யசீர்ஹமீட் 91ஓட்டங் களை யும், இன்சமாம் உல்ஹக் 77ஓட் டங்களையும் அப்துல்ரஸாக் 47ஓட் டங்களையும் இம்ரான்பர்ஹற் 38ஓட் டங்களையும் யூசுப் ஜெஹானா 35ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத் திருந்தனர். பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் இ.ரான் பதான் 100ஓட்டங்களுக்கு 4விக்கெற்றுக் களையும், அனில் கும்ளே 100ஓட் டங்களுக்கு 2விக்கெற்றுக்களை யும், சச்சின் டெண்டுல்கர் 36ஓட் டங்களுக்கு 2விக்கெற்றுக்களை யும் கைப்பற்றியிருந்தனர்.

துடுப்பாட்டத்தைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணியினர் தமது இரண்டாவது இன்னிங்ஸில் 216 ஓட்டங்களுக்கு அனைத்து விக் கெற்றுக்களையும் இழந்தனர். இதன் காரணமாக ஒரு இன்னிங்ஸ் மற் றும் 52ஓட்டங்கள் வித்தியாசத் தில் இந்திய அணியிடம் தோல்வி யைத் தழுவியிருந்தது பாகிஸ் தான் அணி.

பாகிஸ்தான் அணியின் இரண்டா வது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தில் யூசுப் ஜெஹானா 112ஓட்டங்களை யும் இம்ரான் பர்ஹற் 24ஓட்டங்களை யும், யசீர்ஹமீட் 23ஓட்டங்களையும், அப்துல் ரஸாக் 22ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்திருந்தனர். பந்து வீச்சில் இந்திய அணிசார்பில் அனில் கும்ளே 72 ஓட்டங்களுக்கு 6விக்கெற்றுக் களையும், இ.ரான் பத்தான் 26ஓட் டங்களுக்கு 2விக்கெற்றுக்களை யும் கைப்பற்றியிருந்தனர். இவ் டெஸ்ட் போட்டியின் ஆட்டநாயகனாக முச்சதத்தினைப் பெற்றிருந்த இந் திய அணி வீரர் வீரேந்தர் ஷேவாக் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.(யே-68)

## இங்கிலாந்தின் ஒருநாள் அணி

மேற்கிந்தியாவுக்கு சுற்றுப்பய ணம் மேற்கொண்டிருக்கும் இங்கி லாந்து அணி ஒருநாள் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றவுள்ளது. தறபோது டெஸ்ட்போட்டிகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் அடுத்து ஒரு நாள் போடடிகள் நடைபெறவுள்ளன. இந்த ஒருநாள் போடடிக்கான இங கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணியில் மீண் டும் டறன் கோல் அணியில் சேர்க் கப்பட்டுள்ளார். மைக்கல் வோகன், ஜேம்ஸ் அண்டாசன், ஜெகத் பற்றி, இயன் பிளைக்வெல், றிக்கி கிளார்க் கோல் கொலிங்வூட், அன்று பிளின் ரோவ்,அஸ்லிகைல்ஸ்,டரண்கோஸ்,ரீவ ஹாமிஸன், ஜேம்ஸ் ஹேட்லி,அன் ரனி மெக்ரா, கிறிஸ் றெயற் அன்றூ றெஸ்ஜேத், மார்க்கஸ் ரெல்கோதிக் ஆகியோர் மேற்கிநதிய அணிக்கெதி ராக இங்கிலாந்து அணிசார்பாக ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ள வீரர்களாவர். (யே-121)

## முரளிதரனுக்கு ஆதரவளிக்கும் அவுஸ்திரேலிய அதிகாரிகள்

இலங்கைக் கிரிக்கெற் அணி யின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் உலகின் தலைசிறந்த பந்துவீச்சாளர் என் பதில் எந்தவித ஐயமுமில்லை என அவுஸ்திரேலிய கிரிக்கெற் கட்டுப் பாட்டுச் சபையின் சிரேஷ்ட அதிகாரி யங் தெரிவித்துள்ளார்.

யூலை மாதம் அவுஸ்திரேலியா வில் நடைபெறவிருக்கின்ற இலங்கை கரிக்கெற அணியின் சுற்றுப் பயணத தில் தான் கலந்து கொள்வதால் 20 ஆண்டுகாலமாக இரு நாடுகளுக கிடையில் காணப்படும் நட்புறவுக ளுக் கிடையில் பங்கம் ஏற்படலாம என்று மூத்தையா முரளிதரன் தெரி வித்திருந்தார்.

முரளியின் கருத்துத் தொடர் பாக அவுஸ்திரேலிய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை கருத்துத் தெரி விக்கையில்;

யூலை மாதம் அவுஸ்திரேலிய அணியில் கட்டாயம் முரளி இடம் பெற வேண்டும் என்றும் முரளியை தாங்கள் ஏகமனதாக வரவேற்ப தாகவும் தெரிவித்தனர். 1998ஆம் ஆண்டு அடிலெய்டில் நடைபெற்ற டெஸ்ட் போட்டி ஒன்றில் முரளி யின் பந்துவீச்சில் குற்றம் இருப் பதாகத் தெரிவித்த றோஸ் எமர்ஸ னின் செயற்பாடுகளை ஒரு கெட்ட கனவாக நினைக்கும்படி அவுஸ் திரேலிய கிரிக்கெற் சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

முரளியின் பந்துவீச்சுப் பாணி தொடர்பாக தற்போது எழுந்துள்ள சர்ச்சையினால் அவரது கிரிக்கெற் வாழ்க்கைக்கு எந்தவிதமான பாதிப பும் ஏற்படமாட்டாது என சர்வதேச கிரிக்கெற் பேரவையின் தலைவர் இன்ஸாம் மானி தெரிவித்துள்ளார்.


யூலை மாதம் இடம்பெறவுள்ள அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத் தில் முத்தையா முரளிதரன் பங்கு பற்றுவாரா என்பது குறித்து அவர் எதுவித கருத்துக்களையும் இது வரை வெளியிடவில்லை.(யே-121)

## மாவன் இலங்கை அணியின் புதிய டெஸ்ட் தலைவர்


இலங்கை டெஸ்ட் அணியின் புதிய தலைவராக மாவன் அத் தப்பத்து தெரிவுசெய்யப்பட்டிருக் கின்றார். அவுஸ்திரேலிய அணி யுடனான 3டெஸ்ட் போட்டிகளில் சொந்த மண்ணில் தோற்றதன் மூலம் அணியின் முன்னாள் தலைவர் ஹசான் திலகரட்ண தனது பதவியை இராஜினாமாச் செய்திருந்தார். அத னையடுத்தே புதிய தலைவராக அத்தப்பத்து தெரிவு செய்யப்பட் டுள்ளார். ஏற்கனவே ஒருநாள் போட்டி களுக்கு அத்தப்பத்து தலைமை தாங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த நியமனத்தை விளையாட டுத்துறை அமைச்சு அங்கீகரிக்க வேண்டி இருப்பதாக இலங்கை கிரிக் கெற் சபையின் உபதலை வரும் தெரி வாளருமான அரவிந்த சில்வா தெரி வித்தார். டேவிட் அணியின் உப தலைவர் பற்றி இதுவரை தீமானிக் கப்படவில்லையென்றும் அவர் கூறினார். (யே-121)

## உகை விளையாட்டு வலம்



அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் நீச்சல்போட்டித் தெரிவுகளில் பிரபல வீராங்கனைகள் பங்கெடுத்துக்கொள்வதைப் படத்தில் காண்கிறீர்கள்.




மியாமியில் நடைபெறும் ரெனிஸ் போட்டிகளில் பங்கெடுக்கும் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ்.



தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் ஆரம்ப நாளன்று இந்திய உதைபந்தாட்ட வீரர்கள் பயிற்சியில் ஈடுபடுகின்றனர்.




உலக அதிபாரக் குத்துச்சண்டைப் போட்டியில் பங்கெடுத்த றிக்கி ஹற்றன் பர்வையாளருக்கு தான் போட்டியிருந்து விலகிச் செல்வதை அறிவிக்கிறார்.




இங்கிலாந்து ஐஸ்ஹொக்கி அணியின் கோல் காப்பாளர் டேவிட் ஜேம்ஸ் ஒரு கோலைத் தடைசெய்வதைப் படத்தில் காணலாம்.




டம்பா பே அணியின் விக்ரர் சம்றானோ நியூயோர்க் யாங்கிஸ் அணியினருக்கு எதிரான பேஸ் பந்து ஆட்டத்தில்.



இங்கிலாந்து அணி வீரர் ஒருவர் சுவீடனுக்கெதிரான போட்டிக்கு முன்பாகப் பயிற்சியில் ஈடுபடுகிறார்.



சுவீடனின் இப்ராகிம் ஓவிச் இங்கிலாந்துக்கெதிராக கோல் போடும் காட்சி.



மியாமி ரெனிஸ் போட்டிகளில் விளையாடும ஆஜன்ரினாவின் வீரர்.

## கொழும்பு பெனடிக்ற் கல்லூரி உதைபந்தாட்டச் சம்பியனானது

கொழும்பு மாவட்ட 17வயதிற் குட்பட்ட பாடசாலை அணிகளுக் கிடையிலான கால்பந்தாட்டச் சுற் றுப்போட்டியில் கொழும்பு புனித பெனடிக்ற் கல்லூரி அணி சம்பியன பட்டத்தினை வென்றெடுத்துள்ளது. கொழும்பு மாவட்டத்தின் 35 பாட சாலை அணிகள் பங்குபற்றிய இந்த கால்பந்தாட்ட சுற்றுப்போட் டியின் இறுதியாட்டத்தில் கொழும்பு லும பினி கல்லூரி அணியை எதிர்த்து விளையாடிய கொழும்பு புனித பென டிக்ற் கல்லூரி அணி 3:2என்ற கோல் கள் கணக்கில் வெற்றிபெற்று சம்பி யன் பட்டத்தை தனதாக்கிக்கொண்டது.

போட்டியின் ஆட்டநேரம்வரை இரண்டு அணிகளும் மிகத் திற மையாக விளையாடி 1:1என்ற கோல்கணக்கில் சமநிலையில் இருந்தபோதும், வெற்றிதோல்வி யைத் தீர்மானிப்பதற்காக வழங் கப்பட்ட தண்டனை உதையின் மூலம் 3:2என்ற கோல்கள அடிப் படையில் புதிய பெனடிக்ற் கல்லூரி அணி வெற்றிபெற்றிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

இச் சுற்றுப்போட்டியின் அரை யிறுதி ஆட்டத்தில் லும்பினி கல் லூரி அணியும், இசிப்பொத்தான கல்லூரி அணியும் விளையாடியி ருந்தவேளை மற்றுமொரு அரை யிறுதி ஆட்டத்தில் புனித பென டிக்ற் கல்லூரி அணியும், சென் யோசப் கல்லூரி அணியும் விளை யாடியிருந்தன. குறிப்பாக சுமார் 12 வருடங்களின் பின்னர் கொழும்பு மாவட்ட பாடசாலை அணிகளுக் கிடையிலான இக் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் புனித பெனடிக்ற் கல்லூரி அணியினர் சம்பியனாக வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. (யே-68)

## வெள்ளி முற்றம்

# இன்று விட்டேன் கொண்டலடி

**வ. சின்னப்பா**
தனங்கிளப்பு

தென்மராட்சியிலே சாவகச்சேரி, மீசாலை, கொடிகாமம், வரணி போன்ற பல் சந்தைகள் இயங்குகின்ற போதிலும் எல்லாச் சந்தைகளிலும் சாவகச்சேரிச் சந்தையே தலையாய சந்தை போல விளங்கியது. பெரிய இடப்பரப்பு, நான்கு பக்கங்களிலேயேயும் வீதிகள், பெரிய பெரிய நிழல் மரங்கள், நன்னீர்க்கிணறுகள், சிறந்த காற்றோட்டம், சகல பொருட்களையும் ஒரே இடத்தில் வாங்கக்கூடிய வாய்ப்பு, பககத்திலே பஸ் தரிப்பு நிலையம், கூப்பிடு தூரத்தில புகையிரத நிலையம் இத்தனை வசதி வாய்ப்புக்களோடு உள்ளது சாவகச்சேரிச் சந்தை என்று விளம்பரமே செய்துவிடலாம் போல இருந்தது அந்தச் சந்தை.

1999ஆம் ஆண்டு பிற்பகுதியில் மூன்று உக்கிரமாகத் தொடர்ந்து நடைபெற்ற கொடிய யுத்தத்தின பின் அந்தச் சந்தை இருந்த இடமே தெரியா மற்போய் விட்டது.

அமைதி திரும்பி, மீள வந்து பார்த்தபோது, ஈரானிய பூகம்ப நிலையை நேரிலே காண்பது போன்ற பிரமையே எல்லோர் மனதிலும் ஏற்பட்டது.அங்கே கட்டட இடிபாடுகள் துலாம்பரமாகத் தெரிந்தன. இங்கே ஒரேயொரு வேறுபாடு. இடிந்து குவிந்த கட்டடங்களை மூடிக்கொண்டு, விற்பனைக்கு வந்த முன்னைய சிதைந்த பழங்களின் வித்துகளில் இருந்து எழுந்த பப்பாசி, கொய்யா போன்ற பழமரங்களோடு, வேம்பு எருக்கலை போன்ற மரங்களும் பெரிதாக வளர்ந்திருந்தன. இனிய கொய்யாப்பழங்களோடு பெரிய பெரிய பப்பாசிப் பழங்களும் பழுத்துக்குவிந்து கிடந்தன. செடி வகைகளான கத்தரி, மிளகாய், தக்காளி போன்றனவும் காய்த்துக குலுங்கின. இரண்டு பேர் சேர்ந்து தூகக முடியாத அளவு பெரிய பெரிய பூசினிக்காய்களும் மிகுதியாக காய்த்துக் கிடந்தன. மிதிவெடிகளுக்குப் பயந்தோ என்னவோ இராணுவம் உள்ளே நுழையவில்லை. "சாகத்துணிந்த வனுக்குச் சமுத்திரம் முழங்கால் வரை மட்டுமே" என்பது போல , கால் போனால பரவாயில்லை. கண்டதை விடக் கூடாது என்ற அங்கலாய்ப்பிலே துணிந்து உள் நுழைந்த வர்கள் சாககுச் சாக்காக "விளை பொருட்களை" அள்ளிக்கட்டினார்கள். அறுவடை முடிவுறச் சில மாதங்கள் எடுத்தன. அங்கே மிதி வெடியும் இல்லை மிதி வெடிகளும இருக்கவில்லை.

மெல்ல மெல்லப் புத்துயிர் பெற்றுச் சந்தை மீள இயங்கத் தொடங்கவே, வாழைப்பழ விற்பனையாளரான எனது பழைய நண்பர் சங்கரப்பிள்ளையும்,

''பழைய குருடி கதவைத் திறவடி" என்று சொல்வது போல பழையபடி தனது வாழைப்பழ வியாபாரத்தைத் தொடங்கினார். சங்கரப பிள்ளை ஒரு வாயாடி. ஆட்களைக் கண்டவுடன் கலகலப்பாக வரவேற்பார்.

" எந்தப் பழம் தேவை? என்னத்துக்குத் தேவை! கோயிலுக்கோ? சாப்பிடவோ? இண்டைககுத் தேவைக்கோ? நாளைக் குத்தேவைக்கோ? என்ன விலைப்ப ருவம்?'' என்று ஒரே சமயத்தில் பல கேள்விகளைக கேட்பார். நான் அவரிடம் ஒன்றிப் போய் விட்டேன். பழங்களைத்தரும் போது,

''நாப்பத்தைஞ்சு ரூவாய்ச் சாமானை உங்களுக்கு நாப்பது ரூவாய்க்குத்தாறன்; முப்பத்தைஞ்சு ரூவாய்ச் சாமானை உங்களுக்கு முப்பது ரூவாய்க்குத் தாறன்" என்று மக்களுக்குச் சகாயம் செய்வது போல நடிப்பார். நிசமாகவே, வாங்கிய விலையில் குறைய விற்கிறார் என்பது சுத்தப்பொய் ஏன அறிந்திருந்தும் கிண்டலாக எல்லோரும் அவரைச் "சகாயவிலைச் சங்கரப் பிள்ளை" என்று சொல்லுவார்கள். நான்கு வருடங்களின் பின் முதல் முதல் நான் அவரைச் சந்திக்கிறேன்

"ம்... வாங்கோ, வாங்கோ எது வேணும்? கப்பல்லை தரட்டோ, கதலியிலை போடட்டோ?" என்னைக் கண்டதும பழைய பல்லவியைத் தொடங்கினார் சங்கரப்பிள்ளை.

"இதிலை ஒரு கிலோ தாங்கோ" நன்றாகப்பழுத்த ஒரு குலையைக் காண்பித்து விட்டு நான் கேடடேன். அவர் அதிலே பெரிய தொரு சீப்பை வெட்டி நிறுத்து விட்டு,

"ஒண்டரைக் கிலோவுக்குக் கூடக் கிடக்கு இப்ப சாமான் கொஞ்சம விலை. தெரியாதோ? சண்டையாலை வாழைத தோட்டமெல்லாம் எருக்கலைத் தோட்டமாய்ப் போச்சு. ஒரு அறுவது ரூவாய் தாருங்கோ" என்றார். வீடு வாசலை இழந்து தத்தளிக்கின்ற நேரத்திலே அறுவது ரூவாய் சற்றுக் கூடிய தொகையாகவே தெரிந்தது. சங்கரப் பிள்ளை விடவில்லை என்னிடம் பணம் இருப்பதும் எனக்குக் கூடக குறையக்கொடுத்துச் செலுத்தி விடலாம் என்பதும் அவரது கண்டு பிடிப்பு. வாய்ப்பான இடத்திலே பழுத்த பழங்களைச் செலுத்தி விடுவது மற்றொரு தந்திரம். எது எப்படி இருந்தாலும் அவரைக் கைகழுவ என் மனம் இசையவில்லை."வாழைப்பழம் என்ன விலை?"

வீடு வந்ததும் மனைவி கேட்டாள்.

"இப்ப கொஞ்சம் சூடாம் ஒண்டரைக் கிலோ அறுவது ரூவாய்க் குத் தந்தவன். ஆள் பறவா யில்லை. நல்ல நிறை; விலையும் பிளையில்லை"




"பிளையில்லையோ? என்ன ஒண்டரைக் கிலோ அறுவது ரூவாயோ?"

அறுவது ரூவாயுக்கு வாழைப் பழம் வாங்கியது மனைவிக்குப் பிடிக்கவில்லை.

"என்னப்பா, உங்களுக்கென்ன வசரே? அவனென்ன தானதருமஞ் செய்யச் சந்தேக்கை வந்து குத்திக் கொண்டிருக்கிறானே?" மனைவி கிண்டலும் கேலியுமாகக் கேட்டாள். "சீ! அப்பிடிச் சொல்லக் கூடாது ஆக்களைக்கண்டவுடனை என்ன பரிமளிப்பாய் வரவேற்கிறான்!"

''சோழியன் குடும்பி சும்மா ஆடுமோ?''

"முந்திக்கூடி நான் அவனிட்டைத்தானே வாங்குகிறேன்? என்ரை பழைய நண்பனல்லே அவன்?"

"உங்கடை வீக்னெசை அவன் நல்லாய் கண்டு பிடிச்சிட்டான். அள்ளி எடுத்தி விடுகிறான் அறுவது ரூவாய்க்கும் ஆரோனும் இதைப் போய் வாங்குவினமே?

சீ! சரியான நெருப்புவிலை

''பொம்பிளையள் இப்பிடித் தான் முட்டையிலை மயிர் புடுங்குவினம்''

"உங்களுக்கென்னப்பா அவன் மருந்து போட்டு வைச்சிருக கிறானே? " மனைவி தொடர்ந்து எதிர்வாதம் போட்டாள்.

''அவன்ரை விலைக்கு ஒருடமும் வாங்கேலாது''

"உங்களுக்கென்னண்டு தெரியும? மற்ற இடங்களிலையும் விசாரிச்சுப் பார்த்தாத்தானே விஷயம் விளங்கும்?"

''என்னைக்கண்டா விடமாட்டான் என்னவேணும்? இண்டைக் குத்தேவைக்கோ, நாளைத் தேவைக்கோ? எண்டு துவங்கி விடுவான். அறுவது ரூவாய் எண்டா கொஞ்சம் கூடப் போலை தான் கிடக்கு''

நான் கொஞ்சம் நிலை தளர்வதை மனைவி புரிந்து விட்டாள்.

''பாத்தியளே பாத்தியளே, யாபார தந்திரம் உங்களுக்குத் தெரியாது. வாய் இல்லாச் சீவன். என்னட்டை வந்த படியால் தான்..."

"....நடுத்தெருவிலை நிக்கிறன்"

''கேலி கிண்டல் தெரியுமொழிய வேறை ஒண்டும் தெரியாது. அறுவது ரூவாய்க்கு வாழைப் பழத்தை வாங்கிக் கொண்டு வருகுது'' "மனைவியின் பேச்சு அஃறிணையில் தொடர்ந்தது.

"சரி சரி இனிமேல் போகேக்கை பார்ப்பம்''

நான் படியிறங்கி வராவிட்டால் மனைவியைச் சமாளிப்பது கடினம். இது நான் கண்ட உண்மை. என்னைப போல் மனைவி மாருக்கு அடங்கிப போகிறவர்கள் எத்தனை பேர் இந்த நாட்டில் இருக்கிறார்களோ தெரியவில்லை. எனது தரப்பை நான் விட்டுக்கொடுத்தாலும், மனைவி த்னது தரப்பை நியாயப்படுத்தியே தீருவாள் அவள் பெரிய சட்டத் தரணி. எனினும் அவள் பக்கம் நியாயம் இருப்பதாக நான் நினைப்பதில்லை. அவள் விவாதத்தை நான் ஏற்றுக்கொள்வதுமில்லை.

நாங்கள் சாவகச்சேரியிலே எமது வீட்டில் மீளக்குடியேறி கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. இடிந்து கிடக்கும் வீட்டைத் திருத்துவதிலும் பார்க்கப் புதிதாக ஒரு வீடு கட்டிவிடலாம் போல இருந்தது. ஏ-9 பாதை திறந்து விடப்பட்டு எல்லாப் பொருட்களும இங்கு வந்து குவிந்தாலும் விலையில வீழ்ச்சி மிகக் குறைவாகவே இருந்தது. எல்லோரும் தவித்த முயல் அடித்தார்கள். தென்மராட்சியிலே சிதைவடையாத கட்டங்களோ வீடுகளோ இல்லை என்பதை வியாபாரிகள் அறிந்திருக்கிறார்கள். என்ன பாடுபட்டும் வீட்டைத் திருத்தித் தானே ஆக வேண்டும்? கட்டடப் பொருட்களின் விலையோ யானைவிலை, குதிரை விலை எல்லாவற்றையும் முன் போல திருத்துவ தற்கு எங்களுக்கு நிதி நிலைமை இடங் கொடுக்கவில்லை. மனைவியின் இரண்டு பட்டுச் சங்கிலியை விற்று நாங்கள் வீட்டின் ஒரு பகுதியைத் தருத்தி விட்டோம். ஒரு அறைக்கு மாத்திரம் பழையபடி கதவையும் போட்டிருந்தோம். வீட்டுக்குப்பக்கத்திலே அமைத்த கிடுகுக்கொடடில் ஒன்று குசினியாகப் பயன்படுகிறது. தெற்கில் இருந்து வரும் லொறிகள் திரும்பிப்போகும் போது வெங்காயம், புகையிலை முதலியவற்றோடு வாழைக்குலைகளையும் பெருமளவில் எடுத்துச் சென்றதால் சங்கரப்பிள்ளைக்கும் வியாபாரம் சூடுபிடித்தது. எனக்குந்தான் வட்டிலே நன்றாகச் சூடு பிடித்தது.

" அண்டண்டாடு சாப்பாட்டுப் பிரச்சினைக்கே கரைச்சல் படேக்கை அறுவது எழுவது ரூவாய்ககு வாழைப்பழத்தையும் அள்ளிக் கொண்டு வாறியள்''

மனைவியின் திருமங்கல வாழ்த்துக் குறைந்தபாடில்லை. "இப்ப லொறியள் வாறதும் குறைஞ்சு போச்சு அதினாலை வாழைப்பழமும மலிவு. உங்கடை சங்கரப்பிள்ளைக்கு சும்மா காசை அள்ளிக குடாதையுங்கோ''

இது மனைவியின் நித்திய மங்களம்.

அன்றும் வழமைபோல எனது பொருள் வாங்கு படலம் ஆரம்பமானது. சந்தைக்குப் புறப்பட்டேன்.

"இஞ்சேருங்கோ, இண்டைக்கு வாழைப்பழம் கனக்க வாங்காதையுங்கோ"

"வேறை என்னென்ன சாமான் வாங்க வேணும்?" " உப்பு ,புளி, வெங்காயம, பச்சை மிளகாய், உருளைக்கிழங்கு ஒரு கிலோ"

நான் எனது துவிச்சக்கர வண்டியையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டேன் உடைந்து கிடந்த எமது ''கேற்'' வரை மனைவி துரத்திக் கொண்டு வந்தாள்.

"இந்தப் பனீக்கை வாழைப் பழத்தையும் தின்னத்தின்ன பிள்ளையளுக்கும் ஒரே தடிமன்''

நான் துவிச்சக்கர வண்டியில் ஏறி, கால்களை ஊன்றிய படி மிதிக்க ஆயத்தமானே.

"அரைக்கிலோ போதும்''

நான் அசையத்தொடங்கி விட்டேன். "கனக்க அள்ளிக்கொண்டு வாருங்கோ சொல்லிறன் மறுமொழி"மனைவி தெருவில் நின்று உரத்த குரலில் சொல்லுவது எனக்கு கேட்கிறது. நான் திரும்பிப் பார்க்க வில்லை.

சந்தை நன்றாகக் கூடியிருந்தது. வெங்காயம் பச்சை மிளகாய், உப்புப்புளி உருழைக் கிழங்கு அனைத்தையும் வாங்கி விட்டேன். இனி வாழைப்பழம் வாங்கவேண்டும். ''அரைக்கிலோ போதும்'' மனைவி சொல் மந்திரம் நினைவுகக வருகிறது. கால்கள் சங்கரப் பள்ளை " அண்ணை" யிடமே செல்கின்றன.

''வாங்கோ வாங்கோ இண்டைக்கும் பழம் கொஞ்சம் சூடு தான்" வழமையான பல்லவியைத் தொடங்கினார் சங்கரப்பிள்ளை.

''எதுவேணும்? இண்டைத் தேவைக்கோ,நாளைத் தேவைக் கோ? கதலி தரட்டோ? கப்பலிலை போடட்டோ?'' அனுபல்லவி தொடர்ந்தது.

''பழுத்ததாய் வேணும். கொஞ்சம் காணும்'' சரணத்தை நான் தொடர்ந்தேன். "நான் மலிவாய்த் தானே தருவன். நெடுகலும் வாங்கிற உங்களுக்கு.... " சரணத்தில் சங் கரப்பிள்ளையின் இரண்டாவது வரி. நான் பதில் ஒன்றும் சொல்லத் தொடங்கு முன்பாகவே பெரிய சீப்பு ஒன்றை வெட்டினார் சங்கரப்பிள்ளை. பொன்னிறம் போலப் பழுத்திருந்த பழம் ஒன்று அறுபட்டுக் கீழே விழுந்தது.

"இது சும்மாய் வைச்சுக் கொள்ளுங்கோ காசு தரவேண்டாம்'' விழுந்த பழத்தை எடுத்து எனது கூடையில் போடுகிறான் சங்கரப் பிளளை. எனக்கு உள்ளம் குளிர் கிறது.

"வீட்டிலை இருக்கிறவ வுக்கு சங்கரப்பிள்ளையைப் பற்றி என்ன தெரியும்?'' சங்கரப்பிள் ளைக்கு அனுசரணை வழங்கு கிறது என் மனம். சங்கரப் பிள்ளை வெட்டிய சீப்பைத் தராசில போட்டு சரி பார்த்துவிட்டு,

"கூடத்தான் கிடக்கு, நீங்கள் ஒண்டரைக் கிலோவுக்குத் தாங்கோ" சரணத்தின் மூன்றாவது வரி. சங்கரப்பிள் ளையுடையது. 'எவ்வளவு தாறது?' சுருக்க மான நாலாவது வரி.

"இண்டைக்கு வீட்டிலை மங்களம் தான்'' எனது உள்மனம் சொல்கிறது. "முப்பதுப்படி நாப்பத்தைஞ்சு தாருங்கோ" நான் ஐம்பது ரூபாவைக் கொடுக்கிறேன்

''ம்... ஐஞ்சு ரூவாய் சில்லறை இல்லை. இந்தாருங்கோ, மட்டமாய் ஐம்பது ரூவாய் " சொல்லியவர் சேர்த்து வைத்த இரண்டு உதிர்ந்த பழங்களை எனது கூடையில் போடுகிறார். "தலையில் உதிர்ந்த மயிருக்கும் குலையில் உதிர்ந்த பழத்திற்கும் மதிப்புக்கிடையாது'' மனைவியின் கிண்டல் தத்துவம். "வாயிலலாச் சீவன்" மனைவியின் நித்திய மங்கள வரியும் ஞாபகத்திற்கு வருகிறது. சங்கரப்பிள்ளை கட்டி அடிக்கிறார் என்பது கொஞ்சம் புரிகிறது. பழங்களைக் கூடையில் ஒழுங்கு படுத்திக் கொண்டு நிற்கிறேன். நசிந்து விடக்கூடியன என்பதால், எல்லாப்பொருள்களுக்கும் மேலே வாங்கி வைத்த பழங்கள், கூடைக்கு மேலே நன்கு தெரிந்தன. நான் புறப்பட்ட வேளையிலே இரண்டு இராணுவத்தினர் சாதாரண உடையில் வருகிறார்கள்

''எண்ட எண்ட மொனவாத ஓண?" சங்கரப்பிள்ளை சிங்களத்தில் சொன்னான். எனக்கும் ஓரளவு சிங்களம் தெரியும். என்பது சங்கரப் பிள்ளைக்குத் தெரியாது. " வாங்க வங்கா என்ன வேணும்?" தமிழில் எனக்குச் சொன்ன வரவேற் பைத் தான் தான் சிங்களத்தில் சொல்கிறான் சங்கரப்பிள்ளை. வந்தவருள் ஒருவன் நான் வாங்கய அதே பழக் குலையைக் காட்டி,

''மேக்க கீயத? '' இது என்ன விலை என்று கேட்டான். "மேக்க கிலோ எக்க றுப்பியல் விசிப்ப காய், மாத்தயா'' இது கிலோ இருபத்தைந்து ரூபாய் ஐயா சங்கரப் பிள்ளை சொன்னான். எனக்கு மின் சாரம் பாய்ச்சியது போல இருந்தது. கிலோ இருபத்தைந்து ரூபா என்றால், ஒன்றரைக்கிலோவும் முப்பத்தேழு ஐம்பது தானே " என்று எனது உள்மனம் கணக்குப் போட்டது. என்னிடம் நாற்பத்தைந்து ரூவாய் அறவிட்டிருக்கிறான். நீண்ட கால வாடிக்கை யாளனாகிய என்னிடம் சலுகை காட்டுவது போல நடித்ததோடு, கூடிய தொகையையும் பறித்திருக்கிறான். இன்று வந்த சிங்களவ னுக்கு இவ்வளவு மலிவாகக் கொடுக்கிறானே" எண்ண எண்ண மிகுந்த வேதனையாக இருந்தது.

''சோழியன் குடும்பி சும்மா ஆடாது'' மனைவி சொன்ன வாசகம் வேதவாக்கியமாக மாறுகிறது.

"ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்'' நான் நேரிலேயே அனுபவப்பட்டு விட்டேன். கடந்த காலங்களில் எல்லாம் சங்கரப் பிள்ளை இப் படித்தானே செய்திருப்பான். நான் வீட்டுக்கு விரைகின்றேன் மனம் சஞ்சலப்படுகிறது.

வாசலையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்த மனைவி, கூடைக்கு மேலே தெரியும் பழங்களைப் பார்த்து விட்டு , நான் உள்நுழையும் போதே உரிமையோடும் மெல்லிய கிண்டல் தொனியோடும்,

" வாரும் வாரும் வாழைப் பழச்சுமையோடும் வாரும் " என்று புன்னகைத்தாள் .

அவள் எண்ணத்திற்கு முற்றிலும் எதிராக நடந்து கொண்டு என்னை எவ்வளவு பண்பாகக் கண்டிக்கிறாள்? உள்ளம் நெகிழ்கிறது அவளைக் கட்டித்தழுவ வேண்டும்போல இருந்தது. "இன்று விட்டேன் கொண்டலடி " நான் உரத்துச் சொன்னேன். பொருள் விளங்காமல் மனைவி தடுமாறினாள்.

*(யாவும் கற்பனை)*

## இன்று ஒரு தகவல்

# வாழ்வது எதற்காக?

ஒருவர் ஒரு அலுவலகத்தில் வேலை செய்கிறார். அலு வலகம் முடிந்து வீடு திரும்பும்போது ஒரு பெரிய பையைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு போவார். எல்லாமே அலு வலகப் பதிவேடுகள். வீட்டுக்குப்போயும் அலவலக வேலை கள் செய்வதற்காக அப்படிச் சுமந்துகொண்டு போகிறார். கட மையில் கண்ணும் கருத்துமாக இருப்பவர் என்று பெயர்.

பலர் இப்படி உள்ளனர். அலுவலகத்தை வீட்டுக்குச் சுமந்து கொண்டு போகிறவர்கள். இப்படிப்பட்டவர்கள் வாழ்க்கை ஒரு திருவிழா என்பது தெரியாமல் வாழ்ந்து முடித்து விடுவார்கள். வாழ்க்கை என்பது கடமைகளை நிறைவேற்ற அமைந்த ஒன்றா அல்லது அது ஒரு கொண்டாட்டமா என்பதை முத லில் புரிந்துகொள்ள வேண்டும் என்கிறார் ஒஷோ.

வாழ்க்கை கொண்டாடு வதற்காக அமைந்த ஒன்று என நினைப்பவர்கள் வேலைசெய்வதையே விட்டுவிடுவார்கள் என்று அர்த்தமில்லை. அவர்கள் நிச்சயமாக வேலைகளைச் செய்வார்கள். ஆனால் அதுவும் அவர்களது கொணடாட் டத்தின் ஒரு பகுதியாக அமைந்துவிடும். விழாவின் அம்சம் அதில் கலந்திருக்கும். வேலையிலேயே மூழ்கிப் போகின்ற வர்களுக்கு வாழ்க்கையே வேலையாக மாறிவிடும். பலர் அப் படித்தான். வாழ்வை ஒரு தொழிற்சாலையாக மாற்றிக் கொணடு கவலைப்படுவார்கள். வாழ்வதற்காகத்தான் வேலை செய்கிறோம் ஆனால் வேலையே வாழ்க்கையாகிப் போய் விடும். ஆடிப்பாடி மகிழ நேரமில்லாமல் அந்திமகாலம் வந்து சேர் ந்துவிடும்.

எல்லோரும் கொஞ்சம் நன்கு யோசித்துப் பாருங்கள். மனி தனைத் தவிர மற்ற எல்லாவற்றிற்கும் வாழ்க்கை ஒரு விளை யாட்டுத்தான். திருவிழா தான். இவன்தான் வேலை செய்கி றான் கடினமாக உழைக்கிறான். ஏராளமாகக் கண்ணீர் சிந்து கின்றான். நமக்கு நாமே குழப்பத்தையும், சிக்கலையும் உண் டாக்கிக்கொள்கிறோம். அதில் சிக்கிக்கொண்டு காலம் முழு தும் ஓய்வு கிடைக்காதா? நிம்மதியாக வாழ்வை அனுப விக்க முடியாதா? என்று ஓடிக்கொண்டிருக்கிறோம். அந்த நாள் வரவே வராது.

தொழில் போதையில் மூழ்கிக் கிடப்பவர்களுக்கு ஓய்வு, மகிழ்ச்சி, வாழ்வின் இன்பம் எதுவுமே தெரியாது. பழங்குடி மக்களைப் பாருங்கள் தொழிலுக்கும் கொண்டாட்டத்திற்கும் என்ன உறவு என்பது புரியும். நாள்முழுதும் அவர்கள் உழைப்பது இரவில் ஆடிப்பாடி மகிழவே. ஆனால் நாகரிக மனிதன் என்ன செய்கிறான். பகலில் மட்டுமல்ல இரவிலும் உழைக்கிறான். இரவு பகலாக உழைக்கின்றேன் சார் என்று பெருமையாகவும் கூறிக்கொள்கிறான்.

இன்றைய உலகில் ஆனந்தம் இருக்கவேண்டிய இடத் தையெல்லாம் பொழுது போக்கு ஆக்கிரமித்துள்ளது. ஆனந் தம் என்பது வேறு, பொழுதுபோக்கு என்பது வேறு. கொண் டாட்டத்தில் நீங்களும் பங்குகொள்ளலாம், கலந்துகொள்ள லாம். பொழுது போக்கில் நீங்கள் வெறும் பார்வையாளர் தான். ஆட்டத்தைப் பார்ப்பது பொழுது போக்கு. நீங்களே ஆடுவது ஆனந்தம். கொண்டாட்டம் வாழ்வையே ஒரு வேலை யாக ஆக்கிக் கொள்பவர்கள் இந்த உலகையே ஒரு பைத் தியக்கார விடுதியாக ஆக்கிவிடுவார்கள். எதையோ நோக்கி எங்கேயோ ஓடும் பைத்தியக்காரர்களாகத்தான் அவர்கள் காட்சியளிக்கின்றனர். எங்கே ஓடுகிறோம் என்பது யாருக்கும் தெரியாது.

ஒருத்தன் வாடகைக் காரில் ஏறி உட்கார்ந்து "வேகமாகப்போ" என்றான். கார் பறந்தது. சிறிது நேரம் கழித்து காரை ஓட்டியவர் மெதுவாகத் திரும்பி "எங்கே போக வேண் டும்" என்று கேட்டார். அதற்கு இந்த ஆள் "எங்கே போக வேண்டுமென்பது முக்கியமல்ல நான் வேகமாகப் போக வேண்டுமென்பதே முக்கியம்" என்றானாம். இதுபோல் தான் வாழ்வில் எல்லோரும் பறந்து கொண்டிருக்கின்றனர்.

ஒரு ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் ஒருவன் அவ சரமாக எதையோ தேடிக்கொண்டிருந்தான். "எதைத் தேடு கிறீர்கள்" என்றார் ஒருவர். "என் டிக்கெற்றைத் தவறவிட்டு விட்டேன் சார்" என்று கூறிவிட்டு மீண்டும் குனிந்து தேடினார். இதற்குள் ரயில் வந்துவிட்டது. "பரவாயில்லை வாருங்கள் வேறு டிக்கெற் வாங்கலாம்" என்றார் அவர். அது ஒன்றும் கஷ்டமில்லை சார். வேறு டிக்கெற் வாங்கலாம் ஆனால் அந்தப் பழைய டிக்கெற் கிடைத்தால் தான் நான் எந்த ஊரு க்குப் போக வேண்டுமென்பது தெரியும் என்றான் இவன்.

**தென்தச்சி கோ. சுவாமிநாதன்**

# கண்பார்வை இழந்தவர்களின் வாக்களிக்கும் தகுதி பறிபோனது

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் கண்பார்வை இழந்தோர் வாக் களிக்க முடியாது என தேர்தல் ஆணையாளர் தயா னந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

அவர் தொடர்ந்தும் இதுபற்றிக் கூறுகையில் இன்று வெள்ளிக்கிழமை நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கு கண்பார்வை இழந்த ஒருவர் தமது உறவினரை அழைத்துச் சென்று வாக்களிப்பதற்கு அனுமதிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்த போதி லும் அதனை நிராகரிக்க வேண்டி வந்துள்ளது என்று கூறியுள்ளார்.

மேலும் கண்பார்வை இழந்தவரின் இத்தகைய வேண்டுகோள் நியாயமானதாக இருந்தாலும் தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் சட்டங்களின் அடிப்படையில் இது சட்டவிரோத மாக கருதப்படுவதால் கண்பார்வை இழந்தவர் களை வாக்களிக்க அனுமதிக்க முடியாதிருக் கின்றதாகவும் கவலை தெரிவித்துள்ளார்.

இதே சமயம் தேர்தல் தினத்தன்று வாக்களிக் கச் செல்வோர் தமது தேசிய அடையாள அட் டையை எடுத்துச் செல்லுமாறு தேர்தல் ஆணை யாளர் வாக்காளர்களைக் கேட்டுள்ளார்.

(உ-60,10)

# கிழக்கு மாகாண நிலைமை குறித்து ஐரோ.ஒன்றிய நோக்கர் கருத்து

(கொழும்பு)

எந்த ஒரு நாட்டிலும் வன்முறையும், ஜனநாயகமும், ஒன்றாக இருக்கமுடியாது. இலங்கையின் கிழக்குப் பகுதிகளில் கடந்த மாதத்தில் இருந்து தேர்தல் தொடர் பாக நிகழ்ந்துள்ள மூன்றாவது கொலை இதுவென ஐரோப்பிய ஒன்றிய நோககர் குழுவின் தலைவர் தெரி வித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வேட்பாளர் சுட்டுக்கொல்லபபட்டமை தொடாபாக கருத்து தெரிவித்த போதே ஐரோப்பிய ஒன்றிய நோக்கர்கள் குழுத்தலைவர் மேற்கண்டவாறு பி.பி.ஸிக்கு நேற்று முன்தினம் இரவு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது;

கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்றுள்ள இக் கொலைச் சம்பவ சந்தேகம் நேரடியாகவே தமிழீழ விடுதலைப்புலிகள் மீதே விழுந்துள்ளது. சுட் டுக் கொல்லப்பட்ட ராஜன் சத்தியமூர்த்தி தமி ழீழ விடுதலைப்புலிகளின் இலக்குகளை ஆதரிக் கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஆவார். எனினும் புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து போன கேணல் கருணாவின் விசுவாசி யுமாவார் என்று கூறினார். (ம)

## இராசிபலன்

**02.04. 2004**

**(பங்குனி20, வெள்ளிக்கிழமை)**

**துவாதசி முன்னிரவு 5.57மணி வரை**

**இராகுகாலம் 10.40-12.10 மணிவரை**

**சுபநேரம் 6.10-7.40 மணிவரை**

**மேடம்**
தெய்வ சிந்தை, கௌரவக் குறைவு, காரிய தாமதம், மனச்சோர்வு.

**இடபம்**
மனக்கிலேசம், முயற்சி தாமதம், புதிய சிந்தை, தனவிரயம்.

**மிதுனம்**
நல்ல காரியம், பிரயாணம், போசன சுகம், உறவினர் வருகை.

**கடகம்**
மாதர் நட்பு, வாக்கு மேன்மை, விவாதம், தனவிரயம்.

**சிங்கம**
இஷ்ட சித்தி, மனமகிழ்ச்சி, பிரயாணம், பொருள் சேர்க்கை.

**கன்னி**
காரிய தாமதம், சுப செலவு, உடல்நலக் குறைவு, சிந்தனை மிகுதி.

**துலாம்**
புகழ், நல்ல செய்தி, நண்பர்கள் சந்திப்பு, கீர்த்தி.

**விருச்சிகம்**
வாகன பயம், காரிய தடங்கல், உடல் நலக்குறைவு, நண்பர்கள் விரோதம்.

**தனுசு**
கட்டுப்பாடு, பித்த ரோகம், முயற்சி தாமதம், அதிக செலவு.

**மகரம்**
பிரயாண பயம், உறவினர் மனஸ்தாபம், முயற்சி தடங்கல், உடல் நலக் குறைவு.

**கும்பம்**
ஆரோக்கியம், நல்ல வரவேற்பு, எடுத்த காரியம் கைகூடும், சத்துரு ஜெயம்.

**மீனம்**
சத்துரு ஜெயம், உடல் நலம், புதிய செயற்பாடு, காரிய அனுகூலம்

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

- வளவன்.

# பெற்றோரை துன்புறுத்திய மைந்தனுக்கு கடூழியச் சிறை

## யாழ்.நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

தாய் தந்தையரை தாக்கித் துன்புறுத்திய மைந்தனுக்கு ஒரு வருட கடூழியச் சிறைத்தண்ட னையை யாழ். நீதிமன்றம் விதித்துள்ளது. தனது தாயையும் தந்தையாரையும் கடுமையாகத் தாக்கி துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நேற்று முன்தினம் யாழ் நீதிமன்றத்தில் பொலிஸாரால் ஆஜர் படுத்தப்பட்ட கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பையா சத்திய நாதன் என்பவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண் டதைத் தொடர்ந்து யாழ் . மாவட்ட நீதவான் இ.த.விக்னராஜா குற்றவாளிக்கு ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையை வழங்கித் தீர்ப்பளித்தார்.

அத்துடன் அவரிடமிருந்து ஆயிரம் ரூபா தண்டப் பணத்தை அறவிடுமாறும் தவறும் பட்சத்தில் மேலும ஆறுமாத கால கடூழியச் சிறைத் தண் டனை அனுபவிக்க வேண்டுமெனவும் நீதிபதி உத்தரவிட்டார். (உ-4)

# இன்று இரவு 10 மணி முதல் ஊரடங்குச் சட்டம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு இன்று முடிவடைந்து வாக்குப்பெட்டிகள் வாக்குக் கணக் கெடுப்பு நிலையங்களுக்குக் கொண்டு செல்லப் பட்ட பின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டவென இன்று இரவு 10 மணி முதல் ஊர டங்குச சட்டத்தை அமுல்படுத்த பாதுகாப்பு கவுன்சில் தீர் மானித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. நாளை சனிக்கிழமை நிலைமையை அவதானித்த பின் ஊரடங்குச் சட்டத்தை நீடிப்பதா அல்லது கைவிடு வதா என்பது குறித்து தீர் மானிக்கப்படும்.

இதேவேளை, ஊரடங்குச் சட்டம் குறித்து அச்சம் கொண்டுள்ள பொது மக்கள் அத்தியா வசிய உணவுப் பொருட்களை கொள்வனவு செய் வதில் பெரும் அக்கறை செலுத்தி வருகின்றனர். இத னால் சந்தையில் உணவு பொருட்களின் விலை களும் அதிகரித்துள்ளன. ஒரு கிலோ சீனியின் விலை 45 ரூபா வரை உயர்ந்துள்ளது. பருப்பு, கிழங்கு, காய்கறிகளின் விலைகளும் அதிகரித்துள்ளன. சீனியின் இறக்குமதித் தீர்வை ஐந்து ரூபாவால் குறைக்கப்பட்ட போதிலும் சீனியின் விலை இன் னும் குறைவடையாமை குறித்து நுகர்வோர் அதி ருப்தி தெரிவித்துள்ளனர். (உ)

# வாக்களிப்பு நிலையங்களுக்குள் தொலைபேசிகளுக்குத் தடை

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களுக்குள் கையடக்கத் தொலைபேசிகளைக் கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பு நிலையங்களுக்குள் கையடக்கத் தொலைபேசிகளை கொண்டு செல்வதால், பல் வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிவரும் என்பதனை கருத்திற்கொண்டு தேர்தல் ஆணையாளர் இவ்வாறான தடை உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அத்துடன் தேர்தல் வன் முறைச் சம்பவங் கள் இடம்பெறும் வாக்களிப்பு நிலையங்களில் விசேட பொலிஸ் பாதுகாப்புடன் வாக்களிப்பு நடை பெறும் எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித் துள்ளார். (தி-63)

# தைவான் தேர்தல் சர்ச்சை
## ஜனாதிபதியின் அழைப்புக்கு
## எதிர்க்கட்சி இணக்கம் தெரிவிப்பு

தைவான் அதிபர் தேர்தல் சர்ச்சை பேசித் தீர்க்க எதிர்க்கட்சி ஒப்புதல் தைபே, மார்ச் 30 தேர்தல் முடிவு தொடர்பான சர்ச்சையால்




உருவாகியுள்ள அரசியல் நெருக்கடிக்குப் பேசித் தீர்வு காணலாம் என தைவான் அதிபர் சென்ஸுயி விடுத்த அழைப்பை எதிர்க்கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது.

பேச்சு நடத்துவதற்கான திகதி இடம்பற்றி இரு தரப்பும் விவாதித்து முடிவு செய்யும். தேர்தலில் மிகக் குறுகிய வாக்குகள் வித்தியாசத்தில் வெறறி பெற்றார் சென். இதனால் முறைகேடு நடந்திருக்கலாம் என்று குற்றச்சாட்டு எழுந்தது.

இதனிடையே, மறுவாக்கு எண்ணிக்கைக்கு உடனடியாக உத்தரவிடக் கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். சென்னை எதிர்த்து மார்ச் 20 தேர்தலில் போட்டியிட்ட லியன் சான் இவர் எதிர்க்கட்சியான தேசியவாதக் கட்சியைச் சேர்ந்தவர்.

தேர்தல் பிரசாரத்தின் கடைசித் தினத்தில் சென் மீது மர்மமான முறையில் துப்பாக்கிச் சூடு நடந்தது. இதுபற்றி சுயேச்சையான அமைப்பைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டும், துப்பாக்கித் தாக்குதலை, தேர்தல் ஆதாயத்துக்காகத் திட்டமிட்டு சென நடத்தி இருக்கலாம. சதித்திட்டத்தால் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக கூற இதுவரை ஆதாரம் ஏதும் இல்லை என்றும் மனுவல லியன் புகார் கூறியுள்ளார்.

இது ஒரு புறமிருக்க ஜனாதிபதி சென் மீதான கொலை முயற்சி தொடர்பில் அமெரிக்கக் கைரேகை நிபுணர்கள் அவரைக் கடந்த செவ்வாய்க் கிழமை சந்தித்தனர்.

ஜனாதிபதியின் பேச்சாளர் ஜேம்ஸ் குவாஸ் இது குறித்துப் பத்திரிகையாளர்களுக்கு அறிவித்தார். ஆயினும் இவர் கள் ஜனாதிபதியின் காயத் தைச் சோதித்தார்களா? அல் லது ஜனாதிபதியோடு என்ன உரையாடினார்கள் என்பது குறித்து எதுவும் கூற அவர் மறுத்துவிட்டார். தேர்தலுக்கு முந்திய நாள் தனது இறுதிப் பிரசாரத்தை முடித்துக் கொண்டு வாகனத்தை நோக்கிச் செல்கையில் ஜனாதிபதி துப்பாக்கி தாரி ஒருவரால் அவரது அடிவயிற்றில் சுடப்பட்டு உராய்வுக் காயங்களுக்குள்ளானார்.

அமெரிக்காவின் பிற்ஸ்பேக நகரிலுள்ள மாநில கொரணர் சிறில் வெச் இதுபற்றிக் கூறுகையில் இந்த விடயம் பற்றி ஒரு முடிவுக்கு உடனடியாக வர முடியாது. ஆனால் சகல அதிகாரிகளும், இது விடயத்தில் தொடர்புடைய அனைவரும் எமக்குப் பரிபூரண ஒத்துழைப்பு வழங்கி யமை மறக்கமுடியாததும், அவர்கள் மீதான ஒரு கௌரவத்தை ஏற்படுத்தக கூடியதுமான விடயம் என்றார் அவர்.

அமெரிக்காவின் பிரபல ஜனாதிபதி ஜோன் எ. ப். கெனடியின் கொலை தொடர்பிலான வொரன அறிக்கையை நிராகரித்து உண்மை வெளிப் படுத்தப்பட வேண்டும் என்று குரல் கொடுத்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தைவானின் பிரதம அரச வழக்குத் தொடுநர் போஸ்ஸ ரிக் நாடுகளில் பிரபலமான மைக்கல் ஹக், திமதி பாம்பச் போன்ற துப்பறிவாளர்களுக்கும் அழைப்பு விடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (யே)

## உஸ்பெக்கிஸ்தான் மோதலில் இறந்தோர் 42ஆக அதிகரிப்பு


(தஸ்கென்ற்)

உஸ்பெக்கிஸ்தானில் பொலிஸாருக்கும் பயங்கரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுபவர்களுக்குமிடையிலான மோதலில் ஆகக்குறைந்தது 23பேர் இறந்ததாக அந்நாட்டின் உள்துறை அமைச்சகம் அறிவித்திருக்கின்றது.

கடந்த செவ்வாய் இடம்பெற்ற இச்சம்பவத்தைத் தொடர்ந்து இவ் வாரத்தில் மோதல்களில் இறந்தவர்களின் தொகை 42ஆக அதிகரித்திருக்கிறது. பயங்கரவாதத்திற்கு எதிரான அமெரிக்காவின் அழைப்புக்கு இணங்கிய முன்னாள் சோவியத் குடியரசான உஸ்பெக்கிஸ்தானில் தீவிரவாதத் தாக்குதலகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

இவ்வாரத் தாக்குதலில் 20பயங்கரவாதிகளும் 3 பொலிஸாரும் கொல்லப்பட்டதுடன் மேலும் 5பொலி காயமடைந்ததாக உள்துறை அமைச்சகம் தெரிவித்திருக்கிறது.

இதேவேளை, தலைநகர் தஸ் கென்ரில் மாடிக் குடியிருப்பொன்றை பொலிஸார் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தி வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன (யே)



உஸ்பெக்கிஸ்தான் தலைநகர் தஸ்கென்ரில் பாதுகாப்புப்படையினர் ரோந்துப்பணிகளில் ஈடுபடுவதையும் பீதியுற்ற பொதுமகன் ஒருவன் இராணுவத்தற்கு அஞ்சி வீதியோரத்தில் ஒதுங்கியிருப்பதையும் படத்தில் காணலாம்.



மிஸ் இந்திய அழகிப் போட்டி மும்பையில் நடைபெற்றது. இதில் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த அழகிகள் கலந்து கொண்டனர். போட்டியில் மிஸ் இந்திய அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தனுஸ்ரீ தத்தா (நடுவில்), இரண்டாவது இடம் பிடித்த லக்ஷ்மி பண்டித் (வலது), மூன்றாவது அழகி சாயாலி பகத் (இடது) ஆகியோரைப் படத்தில் காணலாம்.



பிலிப்பைஸ் ஜனாதிபதி குளோறியா அரயோ இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வதைப் படத்தில் காண்கின்றீர்கள். தீவிர வாதிகள் பிலிப்பைன்ஸ் தலை நகரை குண்டு வைத்துத்தாக்க எடுத்த முயற்சிகள் முறியடிக்கப்பட்ட தன் பிற்பாடு ஜனாதிபதி நாட்டுமக்களுக்கு உரையாற்றினார். அதன் பின்னான இராணுவ அணிவகுப்பு மரியாதையில் ஜனாதிபதி கலந்துகொண்டார்.




## சதாம் பிடிபட உதவியவர் மெய்க்காவலரில் ஒருவரே!

(லண்டன்)

ஆட்சி வீழநததும் தலைமறைவாக வாழ்ந்த ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன்,கடந்த டிசம்பரில் அமெரிக்கப் படையிடம் பிடிபட உதவியர் அவரது மெய்க்காவலர்களில் ஒருவர் என்று பி.பி.சி. தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

அந்த மெய்க்காவலரின் பெயா முகம்மது இப்ராஹீம் உமர் அல் முஸ்லித் என்றும் அறிவித்துள்ளது. இது தொடர்பாக கடந்த ஞாயிற்றுக் கிழமை பனோரமா நிகழ்ச்சியில் பி.பி.சி. செய்தி ஒளிபரப்பியுள்ளது.

தனது சொந்த ஊரான திக்ரித்தில் மறைவிடம் ஒன்றில் தங்கி வாழ்ந்தார் சதாம்.

இந்நிலையில், அவரது மெய்க்காவலர்களில் ஒருவர் பக்தாத்தில் அமெரிக்க இராணுவத்திடம் சிக்கினார்.

அவரிடம் அமெரிக்க அதிகாரிகள் சதாம் பற்றி கேட்டுக் குடைந்தனர்.திக்ரித்துக்கு அவரை அழைத்துச் சென்று சதாமைப் பிடிககும நடவடிக்கையில் ஈடுபட்ட அமெரிகக இராணுவ அதிகாரிகள், படையினரிடம் பி.பி.சி.பேட்டி கண்டது.

இராணுவ வீரர்களிடம் சிக்கிய ஒருவரிடம் நடத்திய விசாரணையில் சதாம இருக்கும் இடம் பற்றித்தெரிந்தது. அதன் பின்னர் டிசம்பரில் சதாம் பிடிபட்டார் என்று பேட்டியில் தெரிவிக்கப்பட்டதாக பிபிசி. அண்மையில் விடுத்த அறிக்கை தெரிவிக்கிறது.

இதனிடையே,பி.பி.சி.தகவல் பற்றி அமெரிக்க மத்திய கட்டளைச செய்தித் தொடர்பாளர் டொன்காகே கருத்துக் கூறுகையில், இந்தச் செய்தியை உறுதிசெய்ய இயலவில்லை எனறார்.2.5கோடி டொலர் சன்மானம யாருக்கும் இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (யே)



ஆப்கான் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் தனது தாக்குதல்களை நிறுத்தி வெளியேறிய பின்னர் அப்பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பி வருகின்றனர். பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் தற்காலிகமாகத் தலிபான்கள் மீதான தாக்குதல்களை நிறுத்துவதாக அறிவித்தமை தெரிந்ததே.

## மத்தியகிழக்குத் தலைவர்களை ஜோர்ஜ் புஷ் சந்திப்பார்

(வாஷிங்டன்)

மத்திய கிழக்கு நாடுகளின் தலைவர்களை ஏப்ரலில் அமெரிக்க அதிபர் புஷ் சந்தித்துப் பேசவுள்ளார்.

ஏப்ரல் 14ஆம் திகதி இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனை வாஷிங்டனில் ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துப் பேசத்திட்டமிட்டுள்ள புஷ்,பயங்கரவாதத்துக்கு எதிரான போர் மறறும் இஸ்ரேல்-பாலஸ்தீனப் பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பது பற்றி அவருடன்விவாதிப்பார்.

இதற்கு இரு தினங்களுக்கு முனனதாக டெக்சாஸில் உள்ள புஷ்ஷின் பண்ணைக்கு எகிப்திய ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் வர விருக்கிறார். அங்கே அவருடன் ஜோர்ஜ புஷ் பேசவுள்ளார். ஏப்ரல் 21 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையில் ஜோர்தான் மன் னர் அப்துல்லாவை, புஷ் சந்தித்துப் பேசுவார் என்று ஜனாதிபதி மாளி கைச் செய்தித் தொடர்பாளர் ஸகாட் மெகல்லன் வெள்ளிக்கிழமை தெரிவித்தார். (யே)

## ரஷ்யாவில் நேரமாற்றம்

(மொஸ்கோ)

கோடை காலத்தை முன்னிட்டு ரஷ்யாவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் கடிகார நேரம் ஒரு மணி நேரம் முன் கூட்டியே நிர்ண யிக்கபபடுகிறது.

ரஷ்யாவில் 11 இடங்களில் வெவ் வேறு நேரம் பின்பற்றப்படுகிறது. அங்கெல்லாம் ஞாயிற்றுக்கிழமை இரவு 2.00மணிக்கு கடிகார நேரம் ஒரு மணி முன்கூட்டியே நிர்ணயிக் கபபடும். தற்போது இலங்கை நேரத்திற்கும் மொஸ்கோ நேரத்திற்கும் இடையே மூன்றரை மணி நேரம் வித்தியாசம் உள்ளது. இனி இரண்டரை மணி நேரம் தான் வித்தியாசம இருக்கும். கோடையில் நேரம் மாற்றப் படுவதால ரஷ்யாவில் மாலையில் இருள் சூழ்வதற்கு முன்பே வேலை நேரம் முடிந்துவிடும். இதனால் ஏராளமான மின்சாரம் சேமிக்கப்படும். இதே நடைமுறை இலங்கையிலும் பின்பற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (யே)

## 2006ல் சந்திரனில் சீனா

(பெய்ஜிங்)

சந்திரனுககு சீனா முதல் முறையாக செயற்கைக் கோளை 2006ல் செலுததுகிறது. திட்டமிட்டதை விட ஓராண்டுக்கு முன்பே இது செயல் படுத்தப்படுகிறது. சீனா செயற்கைக் கோள் தேசிய நிர்வாக அமைப்பின இயக்குநர் லுவான் ஈஞ்சி இதைத் தெரிவித்தார்.

சந்திரனுக்கு ரொக்கெட் அனுப்பும முதல் திட்டம் குறித்த கூட்டத்தில் பேசிய அவர், "சநதிரனுக்கு ரொக கெட் சிசுவான் மாகாணம் ஜிசாங் ஏவு தளத்திலிருந்து செலுத்தப்படும்" என்றார். (யே)



தலிபான்கள் மீதான தாக்குதல்களை முடித்துக்கொண்டு பாகிஸ்தானுக்கு மீண்டும் திரும்பிவரும் தாக்குதல் ஹெலிக்கொப்டர்களை படத்தில் காண்கிறீர்கள். இத்தாக்குதல்களுக்கு அமெரிக்கா பூரண ஆதரவு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்

**சி.பத்மநாதன்**

பேராதனைப் பல்கலைக்கழகம்.

91

## 3. முக்குவர் சட்டம் (ஆங்கில நூலின் தமிழாக்கம்) இரண்டாம் அத்தியாயம்

மனைவியின் தாய்வழி முதுசொமான அசைவற்ற சொம்கள் மீது கணவன் எந்த உரிமையும் பெறுவதில்லை. காணி செய்கை பண்ணுதல், வரி செலுத்துதல் என்பன தொடர்பாக, அவளுடைய சம்மதமின்றி, மனைவியின் ஆண்.சகோதரர் எல்லா விவகாரங்களுக்கும் பொறுப்பாய் இருப்பர்.

அவளும், தனது சகோதரர்களின் உரிமைகளுக்குப் பாதகம் ஏற்படாத வகையிலும், கணவனின் சம்மதம் பெறாமலும், கொடுப்பனவு செய்யவும் ஆதனங்களால் ஏற்படும் பொறுப்புகளை உத்தரிக்கவும் முடியும்.

அவளுடைய தாய் வழி முதுசொம் தொடர்பாக அவளின் சார்பாக, அவளின் கணவனன்றிச் சகோதரர்களே நீதித் தலத்திலே பிரசன்னமாகுதல் வேண்டும்.அந்த வகையான ஆதனங்கள் பற்றிய வழக்குகளை அவர்களே தங்கள் செலவில் நடத்த வேண்டும்.

தாய்வழி முதுசொமானவை தவிர்ந்த சொம்களைப் பொறுத்தவரையிலே கணவனுக்கும் மனைவிக்கும் உரிய உரிமைகளைக் குறித்து எந்தவிதமான ஐயப்பாடுகளும் இல்லை. அவற்றை அவர்கள் கூட்டாக எதுவுஞ் செய்து கொள்ளலாம்.

தங்கள் தாய்வழி முதுசொமான நிலங்கள் தவிர்ந்த எல்லாவகையான சொம்களையும் கணவனும் மனைவியுங் கூட்டாக விற்பனை செய்வதற்கும். நன்கொடை பண்ணுவதற்கும் உரிமை உடையவர் என்பதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை.

மனைவியின் தாய்வழி முதுசொம் உட்பட உள்ளனவான அசைவுள்ள சொம்கள் எல்லாவற்றையும், விற்பனை செய்வதற்கும் நன்கொடை பண்ணுவதற்கும் கணவனுக்கு உரிமை உண்டென்பதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை.

கலியாணத்தின் பயனாக மனைவி மேலும் அவளின் உரிமைகள், சொத்துகள் என்பன மீதும் கணவன் அதிகாரம் பெறுகின்றான். முன்பு கூறப்பட்ட சில விதிகள் மட்டுமே இதற்குப் புறநடையாக உள்ளன.

### மூன்றாம் அத்தியாயம்
### கணவனும் மனைவியும் மரணித்த பின் சொத்துகளைப் பங்கீடு செய்யும் விதங்கள்

இருவருக்கும் பொதுவாக உரிமை வழிச்சந்தானம் இல்லாவிடின் அவர்கள் வசமான செத்துகள் யாவும் கணவனின் பங்கு, மனைவியின் பங்கு என இரு பங்குகளாகப் பிரிக்கப்படும். மனைவியின் தந்தைவழிச் சொம், அவளின் தாய்வழிச் சொம். அவளின் தந்தை வழி முதுசொம். அவளின் தாய் வழி முதுசொம் ஆகியனவும் தேட்டத்திற் பாதியும் மனைவியின் பங்கிற் சேரும் ஏனைய சொத்துகள் யாவும் கணவனுடைய பங்கிற் சேரும்.

மனைவியானவள் முன்பு கலியாணஞ் செய்து பிள்ளைகள் பெற்றிருந்தால். அவளுடைய பங்கு அப்பிள்ளைகளைச் சேரும். ஆனால் அவளுடைய தாய்வழி முதுசொமான சொம்களுக்கு அவளின் வயிற்றுவாரான உறவு முறையாரும் உரிமை கொள்வர்.

அவளுக்கு அவ்விதமான பிள்ளைகள் இல்லாவிட்டால் அவளின் பங்கு(1) தாய் (2)தாயின் பெண் வழி உரிமைப்பிள்ளை (3) தாயின் தாய் (4) அப்பேத்தியின் பெண்வழி உரிமைப்பிள்ளை ஆகியோரைச் சேரும். கணவன், மனைவி ஆகியோரில் ஒருவர் இறந்தபின், அன்னாருக்கு நேர்வழி முறையான சந் தானம் இல்லாதவிடத்து, அவரின் பங்கு மிகக் கிட்டிய உறவு முறையாரான முற்சந்ததிப் பெண் ணுக்கோ. அவளின் மிகக் கிட்டிய பெண்வழி உரிமைப் பிள்ளைக்கோ சேரும் என்பது நியதி.

கணவனுடைய பங்கிற்கும் இதுவே நியதி. கணவனுக்கோ மனைவிக்கோ பலதாரத்துப் பிள்ளைகள் இருந்தால், ஒவ்பொரு தாரத்துப் பிள்ளைகளும் பங்கு பெறுவர் அது எவ்வாறெனில், ஒவ்வொரு தாரப் பிள்ளைகளும் அவ்வத்தாரத்து உறவு கள் முடிவடையும் பொழுது தாயபாகம் ஏற்பட்டிருப்பின். எவ்வெப்பொருட்கள், அவர்களுக்குக் கிடைத்திருக்குமோ அவ்வப் பொருட்களுக்கு அவர்கள் உரிமை உடையோராவர். பிந்திய தாரத் துக்குரிய சொம்களைப் பங்கீடு செய்வதற்கு முன் முன்னைய தாரப் பிள்ளைகளுக்கு உரித்தான சொம்களை வேறுபடுத்துவது அவசியம்.

கணவனும் மனைவியும் இறந்த பின் அவர்களுக்குப் பொதுவான ஆண், பெண் பிள்ளைகள் இருந்தாற் பெற்றோரின் சொம்கள் மேல்வருமாறு பங்கீடு செய்யப்படும்.

கணவனுடைய தாய்வழி முதுசொமான அசைவற்ற சொம்கள் அவனுடைய மிகக் கிட்டிய வயிற்றுவார்களைச் சேரும். தேட்டம் எல்லாம் இரு சமபாகங்களாகப் பிரிக்கப்படும். எல்லாத் தாரப் பிள்ளைகளில் ஒவ்வொருவரும் சமமான பங்கு பெறுவர். அவர்களில் யாராவது இறந்திருப்பின் அவரின் பாகத்தைப் பங்குக்காரரின் பிள்ளைகள் சமமாகப் பகுந்து கொள்வர்.

மற்றைய பங்கினையும் இவ்விதமாகவே இறந்தவரின் பலதாரப்பிள்ளைகளும் பகுந்து கொள்வர்.

கணவனுடைய சொம்களான அவனுடைய தந்தைவழிச் சொம், தாய்வழிச் சொம், தந்தை வழி முதுசொம் ஆகியன பலதாரப் பிள்ளைகளுக்கும் உரித்தாகும். பிள்ளைகளில் எவரேனும் இறந்துவிட்டால் அவருக்குரிய சொம்கள் அவரின் பிள்ளைகளைச் சேரும்.

மனைவியின் முதுசொமான அசைவுள்ள சொம்கள் எல்லாம் அவளுடைய பலதாரப் பிள்ளைகளுக்குச் சமபங்குளாகப் பிரித்துக் கொடுக்கப்படும். இறந்த பிள்ளைகளின் பங்குகள் அவர்களின் பிற்சந்ததியாருக்குச் சேரும்.

2,3,4,5 என்னும் பிரிவுகளிலுள்ள விதிகளுக்கு அமையப் பாகப்பிரிவினை செய்த பின்பும், அவரவருக்கு உரியபாகத்தைக் கொடுப்பதற்கு முன்பும், ஒவ்வொரு தாரத்து ஆண் பிள்ளைகளும் காசிலும் தானியங்களிலும் தங்கள் கூடப்பிறந்த சகோதரிகளுக்கு உரிமையான பங்குகளைத் தாங்களே எடுத்துக் கொள்வார்கள்.

தங்கள் பெற்றோர்கள் வியாபாரஞ் செய்கின்றபோது விற்பனைக்கு வைத்திருந்த பொருட்களையும் ஆடு மாடுகளையும் ஆண் பிள்ளைகள் முன்னே சொல்லப்பட்ட வண்ணமாகக்கையாடிக் கொள்வர்.

மனைவியின் அசைவற்ற முதுசொம்களைப் பொறுத்தவரையிற் சில பிரத்தியேகமான விதிகள் பின்பற்றப்படும் அவை அடுத்த அத்தியாயத்திலே விபரிக்கப்படும், மனைவியின் தந்தைவழி முதுசொம், தாய்வழி முதுசொம், தந்தைவழிச் சொம், தாய்வழிச்சொம் ஆகிய யாவும் அவளின் முதுசொம் ஆகும். அவளுடைய பிள்ளைகளைப் பொறுத்தவரையில் அவையாவும் அவர்களின் தாய்வழி முதுசொம் என வழங்கும். பெற்றோர் மரணமாகியபின் அவர்களின் பிள்ளை கள் எல்லோரும் ஆண்களாகவோ பெண்களாகவோ இருப்பினும் இதற்கு முன்னாலே சொல்லப்பட்ட விதியின் எல்லா அம்சங்களுக்கும் அமையவே உரிமைகள் உண்டாகும் மனைவியான ஒருத்திக்குப் பெண் பிள்ளைகளோ அவர்களின் பெண் வழி உரிமைப் பிள்ளைகளோ இருப்பினும் அதுவே முறையாகும்.

அப் பெண்ணுக்குப் பெண் மக்களோ அவர்களின் பெண்வழி உரிமைப்பிள்ளைகளோ இல்லாதவிடத்து அவளின் அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான முதுசொமும், தந்தைவழி முதுசொமும் ஆண்மக்களுக்கு உரிமையாகும்.ஆண்மக்களுள் எவரேனும் இறந்திருப்பின் அன்னாருக்குரிய பங்கினை அவரின் பிள்ளைகள் பகுந்து கொள்வர். (தொடரும்)

## ஜே.வி.பி தலைவர் நாட்டை விட்டு செல்வதை தடுக்க முடியாதாம்

### கொழும்பு மஜிஸ்ரேட் நீதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி தலைவர் சோமவன்ச நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு தடை விதிக்குமாறு உத்தரவிடுவதற்கு கொழும்பு மாவட்ட பிரதம மஜிஸ்ரேட் நீதிமன்றம் மறுத்துள்ளது. சோமவன்ச நாட்டை விட்டு வெளியேற முன்னர் அவரை குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் கைது செய்யுமாறு கட்டளையிட வேண்டுமெனக் கோரி தர்மசிறி என்பவர் இவ் வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

மனுதாரர் சார்பில் நீதிமன்றில் ஆஜராகியுள்ள லக்ஷ்மன் ரணசிங்க தெரிவிக்கையில் இறுதியாக சோமவன்ச நாட்டை விட்டு வெளியேறும்போது திஸநாயக்க முதியான் சலாகே நிமால் என்னும் பெயரில் போலிக் கடவுச்சீட்டு மூலமே சென்றிருந்தார் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 1992இல் உயர் நீதிமன்ற வழக்குத் தொடர்பாகவும் விசாரணை செய்ய பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட வேண்டுமென்றும் ரணசிங்க நீதிமன்றத்திடம் கேட்டிருந்தார். ஆனால் இது தொடர்பாக முதலில் பொலிஸில் முறையிட்டிருக்க வேண்டுமென நீதிபதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-6)

## விசேட யுத்த புலனாய்வுப் பயிற்சிபெற்ற 34 சிப்பாய்கள் வெளியேற்றம்

(பலாலி)


யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகச் சேனாதிபதி மேஜர் ஜெனரல் எம்.டி.எஸ்.சந்திரபாலவின ஆலோசனைக்குஅமைய உளவுப் பாதுகாப்புப் பிரிவினரினால் நடாத்தப்பட்ட விசேட யுத்த புலனாய்வு "சிலந்தி" பயிற்சி இல:05 இனை திறமையாக முடித்த சாதாரண சிப்பாய்கள் 34பேர் வெளியேறும் நிகழ்ச்சி புதனன்று காலை யாழ் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தில் நடைபெற்றது.

சிப்பாய எதிரி சம்பந்தமான புலனாய்வுத் தகவல்களை பெற்றுக் கொள்ளவும், பெறறுக் கொண்ட புலனாய்வுத் தகவலின் படி சிறு குழுக்களாக எதிரியை தாக்கி அழித்தலுக்குத் தேவையான அறிவையும் பயிற்சியையும் பெற்று நல்லதொரு ஞானமுடைய, புத்தியுள்ள சிப்பாயை உருவாக்குவதும் இப் பயிற்சியின் நோக்கமாகும்.

பயிற்ச்சியை சிறப்பாக முடித்த சிப்பாய்கள் வெளியேறும் நிகழ்ச்சியில், பிரதம விருத்தினராக யாழ். பாதுகாப்புநடவடிக்கைத் தலைமையக சேனாதிபதி கலந்து கொண்டார்

இந நிகழ்வில் யாழ்.பாது காப்பு நடவடிக்கை தலைமையகம் உதவிக்கட்டளை அதிகாரி பிரிவு சேனாதிபதிகள் உட்பட அதிகாரிகள், சிப்பாய்கள் பலர் கலத்து கொண்டனர்.





# பிரதமரும் ஜனாதிபதியும் நேரில் சந்தித்தபோது...

***சந்திரிகா:*** அட இந்த ரணில் இந்த மாதிரி என்னைப் பதவியிலிருந்து தூக்கியெறிந்திருக்கலாம். முட்டாள்... சோம்பேறி...
**செயலாளர்:** மேடம்பிரதமர் ***ரணில்*** வாறார்...
(உடனே சந்திரிகா ரிவியை நிற்பாட்டுகிறார்)
***ரணில்:*** என்ன ரிவியை நிற்பாட்டிவிடடீர்.
***ச:*** இல்லை... கதைக்கேக்கை ஏன் இடைஞ்சல் என்றுதான்...
***ர:*** எனக்குத் தெரியும் அதிலை தென்கொரியா செய்தியைப் பார்த்திருப்பீர் அப்செட்டாகிப்போயிருப்பீர்...
***ச:*** அதெல்லாம் ஒன்றுமில்லை... அந்த ஜனாதிபதி என்னை யோசனை கேட்டிருக்கவேண்டும்... பிழைவிட்டுவிட்டார்.
***ர:*** ஜனாதிபதி மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முன் பாராளுமன்றத்தைக் கலைக்கச் சொல்லி ஆலோசணை சொல்லியிருப்பீர்.
***ச:***: சரியாச் சொன்னீர். சூடுபட்டது மறக்கேல்லைபோல...
***ர:*** போன தடவை நான் விட்ட தவறை இம்முறை விடப் போறேல்லை.
***ச:***: என்ன அது?
***ர:*** இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் நான் வெற்றி பெற்றவுடனேயே உங்கள் மீதான குற்றவியல் பிரேரணையை நிறைவேற்றிப் போடுவன்.
***ச:*** அப்படியென்றால் நான் மீண்டும் பாராளுமன்றத்தைக் கலைத்துப் போடுவேன்.
***ர:*** அதுதான் முடியாதே! ஒரு வருடத்திற்குப் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாதே!
***ச:*** இவ்விரண்டு மாதத்திற்குத்தான் என்னால் ஒத்திவைக்க முடியுமே. ஒரு வருடத்திற்கு அவ்வாறு ஒத்திவைத்துவிட்டு மீளவும் பாராளுமன்றத்தைக் கலைப்பதா பெரிய காரியம். அதுசரி ஏதோ அடுத்த பாராளுமன்றத்தை நீங்கள்தான் அமைப்பதுபோல் பேசுகிறீர்கள்...
***ர:*** ஏன் ஜனாதிபதி ஒழிக என்று மக்கள் கோசம் போடுவது கேட்கவில்லையா?
***ச:*** அதனாலைதான் சொல்லுறன் எனக்குத்தான் மக்கள் வாக்களிப்பார்கள் என்று?
***ர:*** எப்படி?
***ச:*** ஜனாதிபதி முறையை பத்து மாதத்தில் ஒழிப்பேன் என்று சொல்லியிருக்கிறனல்லோ?
***ர:*** போன வருடமும் அப்படிச் சொல்லித்தானே தேர்தல் கேட்டனீங்கள்.
***ச:*** அதாலைதான் போன தடவையும் எனக்கு வாக்குகள் கணிசமாய் கிடைத்தது. ஒரு இடத்தாலை தானே நீர் அதிகம் வென்றீர்.
***ர:*** அதுக்கென்ன?
***ச:*** இப்ப புரியுதோ ஜனாதிபதியை வெறுக்கிற சனம், ஜனாதிபதியை ஒழிய சொல்லுகிற சனம் என்ன செய்யும்.
***ர:*** எனக்கு வாக்குப் போடும்.
***ச:*** அதுதான் இல்லை. ஜனாதிபதியை ஒழிக்கிறம் என்று சொல்லுகிறவைக்குத்தான் போடும்.
***ர:*** அதாலை...
***ச:*** பத்து மாதத்திலை ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் என்று சொல்லும் எனக்கும்தான் வாக்குப் போடும்..
***ர:*** விளங்கேல்லை...
***ச:*** ஜனாதிபதியை ஒழிக்க ஜனாதிபதியின் கட்சிக்கு வாக்குப் போடப்போயினம்.
***ர:*** அதெப்படி ஜனாதிபதியை ஒழிக்க, ஜனாதிபதிக்கு வாக்குப் போடுறது. நடக்கிற காரியமா?
***ச:*** ஏன் நடக்காது... முன்னயை தேர்தலில் சமாதானத்திற்கான யுத்தம் என்று சொன்னபோது வாக்குப் போட்டவைதானே! அதென்ன சமாதானம் பிறகென்ன யுத்தம் என்று யாராவது கேள்வி கேட்டவையே?
***ர:*** இந்தமுறை அதெல்லாம் சரிவராது. சமாதானத்திற்கு மட்டும்தான் வாக்குக் கிடைக்கும்.
***ச:*** போன தடவை பாராளுமன்றத்தில் உமக்கு என்னைவிட ஒரு இடம்தான் அதிகம் கிடைத்தது என்பதை மறந்து போடாதையும். அப்பவும் நீர் சமாதானம் என்று சொல்லித்தான் வாக்குக் கேட்டனீர்.
***ர:*** ஆனால் இந்தமுறை அப்படியில்லை.

ஜனாதிபதி தென்கொரியா பற்றிய, பி. பி. சி செய்தியை ரீவி யில் பார்த்துக் கொண்டிருக்கிறார். அதில் தென்கொரிய ஜனாதிபதி மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுகின்றது. அதனை ஜனாதிபதியின் ஆதரவாளர்களான எதிர்க்கட்சியினர் எதிர்த்துக் குரல் கொடுகின்றனர்.

அப்போது அரசாங்கக் கட்சியின் சார்பான சபாநாயகர், ஜனாதிபதியின் கட்சியினரை வெளியேற்றுமாறு பணிக்கின்றார். ஒவ்வொருவராக சபையின் காவலர்கள் வந்து ஜனாதிபதியின் கட்சியின் அங்கத்தவர்களை இழுத்துக்கொண்டு வெளியேற்றுகின்றனர். இறுதியில் ஜனாதிபதி மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை மூன்றில் இரண்டு வாக்குகளால் நிறைவேற்றப்படுகின்றது.

சபையில் மிஞ்சியிருந்த இரு ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் மட்டுமே அவருக்கு ஆதரவாக வாக்குப் போடுகின்றனர். அதனைத் தொடர்ந்து தென்கொரிய பிரதமர் காபாந்து ஜனாதிபதியாகப் பதவியேற்று அமைச்சரவைக் கூட்டுகின்றார்.

***ச:*** அதுதானில்லை... சிங்களச் சனத்திலை இரண்டுவிதமான சனமும் இருக்கு. சமாதானத்தை விரும்பிற சனமும் இருக்கு. தமிழரையும் புலிகளையும் வெறுக்கிற சனமும் இருக்கு.
***ர:*** இரண்டு பேரையும் ஒரே நேரத்திலை திருப்தி செய்ய முடியாதே?
***ச:*** ஏன் முடியாது. நான் முன்னைய தேர்தலில் என்ன செய்தனான்? முதல் தேர்தலிலை சமாதானத்திற்கான யுத்தம் என்று, நானே சமாதானத்தையும் யுத்தத்தையும் ஒரே நேரத்திலை ஆதரித்துப் பேசினன். அடுத்த தேர்தலிலை. எனது கட்சிக்குள் நான் சமாதானத்தை ஆதரித்துப் பேச, முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தமிழருக்கு எதிராய் - புலிகளுக்கு எதிராய் பேசவைத்தன்.
***ர:*** உண்மைதான் - அந்த மனிசனும் வஞ்சகமில்லாமல், தமிழரை வேர், மரம், செடி, கொடி என்றெல்லாம் கேவலமாய் பேசினார்.
***ச:*** அதாலை இரு தரப்பு வாக்குகளையும் நான்

***ர:*** இந்தத் தடவை உங்கடை கட்சி ஒட்டுமொத்தமாக சமார்தானத்தைப் பற்றித் தானே



பேசுகினம்.
***ச:*** அங்கைதான் நீர் தவறுவிட்டிட்டீர். நான் இந்த முறை சமாதானத்தை வலியுறுத்திப் பேசினாலும், நான் கூட்டணி அமைத்த ஜே.வி.பி., புலிகளை எதிர்த்தல்லே பேசுகினம்.
***ர:*** ஓ!...
***ச:*** புரியுதே முதல் தேர்தலிலை, நானே சமாதானத்தையும் யுத்தத்தையும் பேசினன். இரண்டாவது தேர்தலிலை, எனது கட்சியில் நான் சமாதானத்தைப் பேச, பிரதமர் யுத்தத்தைப் பேசினார். இம்முறை ஜே.வி.பி. இப்ப புலிகளையும் தமிழரையும் எதிர்த்து பேசும். நான்



சமாதானத்தையும் பேச்சுவார்த்தையையும் அமைதியையும் பேசுவன். இரு தரப்பு சிங்களச் சனமும் எனக்கு வாக்குப் போடும்.
***ர:*** அதுதான் இரண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டனீரோ?
***ச:*** (ஹி ஹி சிரிப்பு) இப்பத்தான் உமக்கு அரசியல் புரியுது. எப்படி எனது கெட்டித்தனம். புலிகளுடன் நிபந்தனையில்லாமல் பேசுவன் என்று - ஒரு தேர்தல் விஞ்ஞாபனம், நிபந்தனையோடை பேச்சு இல்லாவிட்டால் சண்டை என்ற ரீதியில் இன்னொரு விஞ்ஞாபனம்...
***ர:*** அதுசரி! அப்ப தேர்தலிலை வென்றால் என்ன - சண்டை பிடிப்பீரோ? சமாதானமாய்ப் போவீரோ?
***ச:*** நானென்ன, நீரென்ன, யார் இனி ஆட்சிக்கு வந்தாலும், இனிமேல் புலிகளோடை சண்டை பிடிக்கேலாது. அதுதான் இன்றைய இலங்கையின் யதார்த்த நிலை.
***ர:*** அப்படியென்றால் உடனை சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கவல்லோ வேணும்...
***ச:*** அதுக்கென்ன கஷ்டம்.

சம்மதிக்குமோ?
***ச:*** ஜே.வி.பி. சம்மதிக்கா விட்டால், அவை கூட்டமைப்பிலிருந்து வெளியேற வேண்டியதுதான்.
***ர:*** ஜே.வி.பி வெளியேறினால் பாராளுமன்றில் யார் உமக்கு ஆதரவு தரப்போகிறார்கள்.
***ச:*** ஏன் தமிழக் கட்சிகள் இல்லையே?
***ர:*** யாரைச் சொல்கிறீர் டக்ளசையோ?
***ச:*** சீ தமிழ்க் கூட்டமைப்பை.
***ர:*** அவை ஏன் உமக்கு ஆதரவு தரப்போகினம்?
***ச:*** போன வருசம், ரவூப் ஹக்கீம் உம்மோடை பிரச்சினைப்பட்டு - தான் அரசாங்கத்திற்கு தாற ஆதரவை விலக்கப் போவதாகச் சொன்னபோது, தமிழ்க் கூட்டமைப்பு என்ன சொன்னது?
***ர:*** அவருக்குப் பதிலாய் தாங்கள் எனக்கு ஆதரவு தாறமெண்டவை.
***ச:*** ஏன்?
***ர:*** சமாதான நட்வடிக்கைகள் இடையில் குழம்பக் கூடாது என்றபடியால், அரசாங்கம் விழாமல் இருக்கத் தாங்கள் ஹக்கீமிற்குப் பதிலாக ஆதரவு தாறமெண்டவை.
***ச:*** ஆ... இப்ப புரியுதே! சமாதான நடவடிக்கையை நான் ஆரம்பித்து, அதனாலை ஜே.வி.பி என்னை விட்டுப் போனால், அந்த இடத்தை உடனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிரப்பும்? புரியுதே?
***ர:*** சரி... நீர் போடுற நிபந்தனைக்ளைப் பார்த்துப் புலிகள் பேச்சுக்கு வர மறுத்தால்...
***ச:*** ஏன்? என்ன நிபந்தனை நான் போட்டனான்?
***ர:*** புலிகளோடை மட்டுமல்ல எல்லாத் தரப்போடையும் பேசுவம் என்டெல்லே கதிர்காமர் சொல்லியிருக்கிறார்.
***ச:*** நீர் தவறாய் புரிந்துகொண்டீர். நாங்கள் அப்படிச், சொல்லேல்லை. புலிகளோடை பேசுவம் மற்றத் தரப்போடு கலந்தாலோசிப்போம் என்றுதான் சொன்னனாங்கள்...
***ர:*** எவ்வளவு காலத்திற்கு ஆலோசனை நடத்திக்கொண்டிருப்பீர்கள்...
***ச:*** நீர் எப்படி இரு வருடமாய் ஆலோசனை மட்டும் புலிகளோடை நடத்திக்கொண்டிருந்தீர். அப்படித்தான் நானும் அடுத்த தேர்தல் வரை காலம் கடத்துவன்.
***ர:*** நீர் ஆட்சியில் இருந்தால் அடுத்த தேர்தல் வர ஐந்து வருடம் ஆகும். அதுவரை காலம் கடத்தேலுமே? நானே ஒரு வருடத்திற்கு மேல் காலம் கடத்தேலாமல் கஷ்டப்பட்டன். நல்லவேளை நீர் பாராளுமன்றத்தைக் கலைத்தபடியால் தப்பினன்.
***ச:*** என்ன?
***ர:*** புலிகளோடை இனிமேல் காலங்கடத்தேலாது. அவர்கள் நல்லவர்கள். ஆனால் முட்டாள்களல்ல. அவர்கள் இடைக்கால வரைபை தந்து என்னை பொறியிலை மாட்டிப் போட்டாங்கள். அதுவும் உலகம் முழுவதும் சுற்றித் திரிந்து அதைத் தயாரித்தார்கள். அதனாலை, அதை அவர்கள் தயாரிக்கவில்லை - சர்வதேச நாடுகள்தான் தயாரித்தது என்ற ஒரு மாயையையும் அவர்கள் உருவாக்கிப்போட்டார்கள். அதனாலை அதை நான் ஏற்கவும் முடியாமல், நிராகரிக்கவும் முடியாமல் பட்ட கஷ்டம் எனக்கெல்லோ தெரியும். நல்லவேளை நீர் பாராளுமன்றத்தைக் கலைத்தபடியால் நான் கொஞ்சம் மூச்சுவிடக் கூடியதாய் இருக்கு.
***ச:*** என்ன சொல்லுறீர்.
***ர:*** நான் இப்ப இஞ்சை வந்ததே உம்மை தேர்தலிலை வெற்றிபெற வேண்டும் என்று வாழ்த்தத்தான். நிச்சயமாய் நீர்தான் வெல்வீர். நான் வாரன்..
***ச:*** எங்கை போறீர்?
***ர:*** கதிர்காமத்தானை வேண்டப் போறன். நான் தோற்கவேணுமென்று. நான் வாரன்.
***ச:*** நானும் கதிர்காமத்தானை - சீ, கதிர்காமரைத் தான் கேட்கவேணும். (தொலைபேசியில்) ஹலோ கதிர்காமர்..
***கதிர்காமர்:*** என்ன மேடம்?
***ச:*** இந்தமுறை நாங்கள் தேர்தலிலை வெல்லுவமே?
***க:*** பயப்படாதையுங்கோ ஜே.வி.பி இருக்கு, நாம்தான் வெல்லுவம்.
***ச:*** ஐயோ! வேண்டாம் நாங்கள் தோற்கவேணும்.
***க:*** பயப்படாதையுங்கோ அனுரா இருக்கிறார். நாங்கள்தான் தோற்பம்..

**இது ஒரு கற்பனை வடிவம்**

## உள்ளூராட்சிச் சபைகளுக்கு நிதி உதவி வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கிராம பிரபோத திட்டத்தின் கீழ், வடக்கு கிழக்கு மாகாணத்தின் கழ் உள்ள 72 உள்ளூராட்சி சபைகளுக்கு நிதி உதவிகள் வழங்கப்படவுள்ளன.

உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின சிரேஷ்ட உதவிச் செயலாளர். இதற்கான விசேட ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களின் திட்டமிடல் பிரிவு அதிகாரிகள் தமது நிர்வாக எல்லைக்குள் இனம் காணும் அபிவிருத்திட்டங்கள் தொடர்பான விபரங்களை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு உதவிச் செயலாளர் கேட்டுள்ளார்.

இனங்காணப்படும் திட்டங்களை மும்மொழிகளிலும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள படிவங்களை பூர்த்தி செய்து உள்ளூராட்சி ஆணையாளரூடாக விண்ணப்பம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (து-63)

## வாக்குச் சீட்டுக்களை இன்று 3மணி வரை பெறலாம்

(வவுனியா)

தேர்தல் தினமான இன்று பி.ப. 3.00மணிவரையும் தேர்தல் வாக்குச் சீட்டுக்கள் வவுனியா மத்திய தபாலகத்தில் வைத்து வழங்கப்படும் என வவுனியா மாவட்டத் பிரதி தபால் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்திற்கு அதிகமான வாக்கு அட்டைகள் கிடைக்கப்பெற்றன. வவுனியா நகரப் பகுதியில் 53ஆயிரத்து 488வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெற்றன. இதில் 16ஆயிரத்து 300வாக்காளர்கள் அட்டை விநியோகிக்கப்பட வில்லை.

இதற்கான காரணம் குறிப்பிட்ட முகவரியில் வாக்காளர்கள் வசிக்காமையும் முகவரிகள் பிழையாகவுள்ளதுமே என அவர் மேலும் கூறியுள்ளார்.

பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும்

-குறள்

வலம்புரி

## தீராத கவலை தரும் நிகழ்வு

இலங்கையின் 13 ஆவது பொதுத் தேர்தல் இன்று நடைபெறுகிறது. இரண்டு ஆண்டு கால இடைவெளிக்குள் மீண்டுமோர் தடவை மக்கள் வாக்களித்து அரசாங்கத்தை தெரிவு செய்ய வுள்ளனர்.

கடந்த 12 பாராளுமன்ற ஆட்சிக் காலங்களிலும் தமிழ் மக்கள் பட்ட துன்ப, துயரங்கள் ஏராளம். சிங்கள ஆட்சியாளரிடம் இல்லாது போன மனிதாபிமானம், தமிழ் மக்களின் உரிமையை சூறையாடியது, தமிழர்கள் என்றால் அவர்கள் வந்தேறு குடிகள் என்ற சிந்தனை சிங்கள மக்களிடம் ஆழமாக போதிக்கப்பட்டதன் விளைவாக தமிழர்களை காலத்துக்காலம் நசுக்கும் நடவடிக்கைகளில் சிங்கள மக்கள் ஈடுபட்டனர்.

தமிழ் மக்களின் உரிமைகள் அவர்களின் தாயகம் என்ற விடயங்களில் தமிழ்த் தலைவர்கள் சிங்களத் தலைவர்களோடு பேச்சுக்கள் நடத்திய போதிலும், வெள்ளையர்கள் கறுப்பர்களை எப்படிப் பார்த்தார்களோ அதே பார்வையில் சிங்களத் தலைவர்கள் தமிழ்த் தலைவர்களை நோக்கினர்.

பாராளுமன்றத்தில் தமிழ்த் தலைவர்களை சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் மிகக் கேவலமாகத் தூற்றினர். அவர்கள் அகிம்சைப் போராட்டம் செய்தபோதெல்லாம் சிங்களப் பொலிஸார் குண்டாந்தடிப் பிரயோகம் செய்து அகிம்சைப்போராட்டத்தை அடக்கினர்.

இதன் காரணமாக தமிழ்-சிங்கள இன வேற்றுமை விரிவடைந்தது. இதனை மேலும் வலுப்படுத்துவதாக இலங்கை வரலாறு திரிபு படுத்தப்பட்டு சிங்கள வராலாற்றாசிரியர்களால் எழுதப்பட்டது. தமிழினம் வந்தேறு குடிகள்- சிங்கள பௌத்த மக்களே ஆட்சிக்குரியவர்கள், இவ்வாறாக பாட நூல்களில் வரலாறு திரிபு படுத்தப்பட்டதனால் சிங்கள மாணவர்கள் இயல்பாகவே தமிழ் மக்கள் மீது கோபம் கொண்டனர்.

தமிழர்கள் என்றால் அவர்கள் வெறுப்பிற்குரியவர்கள் என்ற உணர்நிலை சிங்கள ஆட்சியாளா களினால் வகுப்பறைகளில் வைத்து பிஞ்சு உள்ளங்களில் ஊட்டப்பட்டது. இதன் விளைவை அனுபவித்த அழிவுகள்- இழப்புகள் போதும் என்ற இயலாமைக்கு நாடு வந்துவிட்டது.

இருந்தும் சிங்களப் பேரினவாதக் கட்சிகள் இன்னமும் இனவாதத் தீயை மூட்டிவிடும் முயற்சியோடு இருக்கின்றன.

இந் நிலையில் விடுதலைப் போராட்டமும் அதனைத் தொடர்ந்து சமாதானப் பேச்சுக்களும் நடைபெறலாயிற்று.

இருந்தும், சமாதானத் தீர்வை அடைய முடியவில்லை. ஆக சமாதானத் தீர்வை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றோம் என்ற ஆறுதல் மட்டும் ஏற்பட்டது.

இத்தகையதோர் நிலையில் 13 ஆவது பாராளுமன்ற பொதுத் தேர்தல் இன்று நடைபெறுகின்றது.

இத்தேர்தலின்போது வாக்களிக்கின்ற சிங்கள மக்களின் மன நிலைக்கும், இதற்கு முன்னைய தேர்தல்களில் வாக்களித்த அதே சிங்கள மக்களின் மனநிலைக்கும் இடையே நிறைய வித்தியாசம் உண்டு.

அதாவது, கடந்த பாராளுமன்றத் தேர்தல்களின் போதெல்லாம் தமிழ் மக்களுக்கு எதிரான போக்கை எந்தக் கட்சி கொண்டிருந்ததோ அந்தக் கட்சியே வெற்றி பெற்று ஆட்சிப்பீடம் ஏறியது. ஆனால், அத்தகையதோர் சூழ்நிலை இன்று மாறிவிட்டது. இப்போதெல்லாம் சமாதானத்தில் தேவைப்பாடு மக்களால் உணரப்பட்டு விட்டது.

சமாதானத்தை ஏற்படுத்த எந்தக் கட்சி விசுவாசமாகப் பாடுபடுமோ அந்தக் கட்சியை ஆட்சியில் அமர்த்த சிங்கள மக்கள் தயாராகி விட்டனர். இதில் சில புறநடைகள் இருப்பினும், பொதுவான போக்கு சமாதானம் என்பதாக நிலைமை மாறி விட்டது.

இத்தகையதோர் சந்தர்ப்பத்தில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலை பெரும் கவலையைத் தருகிறது.

அங்கு பல ஆண்டுகளாக வாழ்ந்த வடபுலத்து தமிழ் மக்கள் வெளியேறுவது தீராத கவலையைத் தருவதாக உள்ளது.

# யாழ். பல்கலையில் இதழியல் கலை டிப்ளோமா மே மாதம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோவின் முன்னெடுப்பில் யாழ். பல்கலைக்கழகத்தில் இதழியல கலை டிப்ளோமா கற்கை நெறி மே மாதத்தில் ஆரம்பமாகவுள்ளது.

முழுநேரமாக இக் கற்கை நெறியில் இணைந்து பயில்பவர்கள் ஓராண்டிலும் பகுதி நேரமாகப் பயிலுபவர்கள் இரண்டாண்டிலும் இந்த கற்கை நெறியைப் பூர்த்தி செய்ய முடியும் எனவும், வகுப்புக்கள் ஜும்மா மசூதி ஒழுங்கையில் நிறுவப்பட்டுள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பகுதிநேர டிப்ளோமா கற்கை நெறியில், க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தியடைந்த முழுநேரப் பத்திரிகையாளர்கள் இணைந்து கொள்ள முடியும்.

முழுநேர டிப்ளோமா கற்கை நெறியில் க.பொ.த. உயர்தரத்தில சித்தியடைந்த இதழியல் அனுபவம் மிக்கவர்கள் இணைந்து கொள்ள முடியும்.

இதற்கான விண்ணப்பங்களை உதவிப் பதிவாளர், கலைப்பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு 2004.04.30 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு அனுபபிவைக்குமாறு கேட்கப்பட்டுளளது. (உ)

## தொழிலாளர் வாக்களிக்க 4 மணிநேர விடுமுறை

(கொழும்பு)

இன்று நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் போது தொழிலாளர்கள் அனைவரும் வாகக்ளிப்பதற்கு வசதியாக குறைந்தது 4 மணிநேர விடுமுறையாவது வழங்கவேண்டும்.

இது தொடர்பாக அகில இலங்கை தொழிற் சங்கங்களின் சம்மேளனம், தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸ நாயக்கவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் வாக்காளர்கள் தொழில்புரியும் இடம், வாக்களிப்பு நிலையம் என்பவற்றிக்கு இடையேயான தூரத்தை கருத்தில் கொண்டு இந்த விடுமுறை நேரநீடிப்பு வழங்கவேண்டும்.

அரசசார்பற்ற நிறுவனங்களில் தொழில்புரியும் ஊழியர்களிற்கு விடுமுறை வழங்குவது தொடர்பாக தேர்தல் திணைக்களத்தால் இதுவரை ஒரு சுற்றுநிருபமும் வெளியிடப்படவில்லை. இதனால் இந் நிறுவனங்களில் தொழில் புரியும் ஊழியர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனச சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (தி-63)

## அரச ஊழியர்கள் வாக்களிக்க கட்டாய கடமை விடுமுறை

### அரச சேவைகள் பணிப்பாளர் கோரிக்கை

(கொழும்பு)

சகல அரசாங்க ஊழியர்களும் வாக்களிக்கும் வகையில் கடமை விடுமுறையை வழங்குமாறு அரசாங்க சேவைகள் பணிப்பாளர் நாயகம் ரிஜ்சேட் அமர வீர அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வாக்களிப்பதற்கென அரச ஊழியர்களுக்கு கடமை விடுமுறையை வழங்குவது கட்டாயமாகும்.

அரச ஊழியர் ஒருவர் பணிபுரியும் அலுவலகத்திற்கும் வாக்களிப்பு நிலையத்திற்கும் இடையிலான தூரத்தைக் கவனத்திற்கொண்டு போதியளவிலான கடமை விடுமுறை வழங்கப்படவேண்டும்.

தபால்மூலம் வாக்களிக்கத் தவறியவர்கள் சம்மந்தப்பட்ட வாக்குச் சாவடிகளில் இன்று வாக்களிக்கலாம்.

அரச ஊழியர்களின் வாக்களிப்பு உரிமைகளுக்கு யாராவது தடையாக இருந்தால் அது பற்றித் தேர்தல் அதிகாரிக்கோ அல்லது சம்மந்தப்பட்ட அமைச்சின் செயலாளருக்கோ முறைப்பாடு செய்ய முடியும் என்றும் அரசாங்க சேவைகள் பணிப்பாளர் நாயகம் அரச ஊழியர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (உ - 60, 10)

## காணாமல் போனவர் சம்பந்தமாக விசாரணை

(கொழும்பு)

இல.63, வல்வராயன்கட்டு, ஜெயபுரம் கிளிநொச்சி என்றும் முகவரியில் வசித்த சுப்பையா சிவலிங்கம் என்பவர் 12.01.2001 ஆம் திகதி காணாமல் போனதாக செய்யப்பட்ட முறைப்பாடு சம்பந்தமாக இல.101 வைத்திய வீதி, கொழும்பு-01 இல் அமைந்துள்ள காணாமல் போனவர்கள் சம்பந்தமாக விசாரணை செய்யும் பிரிவினர் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

இதுவரை செய்யப்பட்ட விசாரணைகளிலிருந்து குறிப்பிட்ட நபர் காணாமல் போனதாக தகவல் கொடுத்த அன்னம்மா என்பவரிடமிருந்து சில தகவல்கள் பெற வேண்டியிருப்பதால் அன்னம்மா என்பவரை காணாமல் போனவர்கள் சம்பந்தமான விசாரணைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது. (து)

## ஓமந்தையில் வாக்களிக்க வசதியாக 20 அடி நீளம் கொண்ட 54 தற்காலிக கொட்டில்கள்

(வவுனியா)

வவுனியா ஓமந்தை சோதனைச் சாவடி அருகில் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதி வாக்காளர்களின் நன்மை கருதி பிரத்தியேக கொத்தனி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

20 அடி நீளம் கொண்ட 54 தற்காலிகக் கொட்டில்கள் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுக்குமாக அமைக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, தூரஇடங்களில் இருந்து வரும் வாக்காளர்களுக்கான அடிப்படை வசதிகளும் வழங்கப்படவுள்ளன. இதற்காக நேற்று பி.ப.1.00 மணியடன் ஓமந்தைச் சோதனைச் சாவடியூடான தனியார் போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டுள்ளன. வன்னி வாழ் மக்கள் தேர்தலுக்கு வாக்களிப்பதற்குத் தயாராகவுள்ள அதே வேளை, அதிகளவானோர் இம்முறை தேர்தலில் வாக்களிப்பார்கள் என நம்பபப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ)

## வவு. தபாலகத்தில் 21 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் தேக்கம்

(வவுனியா)

வவுனியா தபாலகத்தில் 21 ஆயிரத்திற்கும் அதிகமான வாக் காளர் அட்டைகள் விநியோகம் செய்யப்படாமல் தேக்கிக்கிடக் கின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் வாக்காளர் அட்டைகளே மேற்படி தபாலகத்தில் கூடுதலாகத் தேங் கிக் கிடக்கின்றன.

வாக்காளர் அட்டைகள் கிடைக் கப் பெறாதோர் வாக்காளர் பட்டி யலில் பெயர் இருப்பின் அவர்கள் வாக்களிக்க முடியும் என வவுனியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணை யாளர் அறிவித்துள்ளார். (தி-63)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

மரணத்தைத் தவிர்க்க முடியாது. நீரிலும் காற்றிலும் அரண்மனையிலும் சிறையிலும் எங்குமே மரணம் நிலவுகின்றது. எது உங்களைப் பயமற்று இருக்கச் செய்யும்? நீங்கள் அந்த எல்லையற்ற, இறப்பற்ற, பிறப்பற்ற ஆன்மா என்ற அனுபூதி. அதைத் தீ எரிக்க முடியாது. எந்த ஆயுதமும் அழிக்க முடியாது. எந்த விஷமும் கொல்ல முடியாது. இது வெறும் கொள்கையல்ல. நினைவில் வையுங்கள். வெறும் ஏட்டுச் சுரைக்காய் அல்ல. கிளிப்பிள்ளை போல் சொன்னதைத் திருப்பிச் சொல்வதும் அல்ல.

**சுவாமி விவேகானந்தர்**

## தவக்காலச் சிந்தனை 37

இயேசு தான் இறைமகன் என்று நிருபிக்க முயன்று பேசியதால் அவரைக் கல்லால் எறிய எத்தனிக்கின்றனர். எனவே அவருடைய செயல்களின் பொருட்டாவது தன்னை இறைமகன் என்று ஏற்றுக் கொள்ள அழைப்பு விடுக்கின்றார். ஆண்டவரின் ஆவியால் அவர் அருள்பொழிவு செய்யப பட்டவர் என்று கூறி தனது பணியை விளக்கிக் கூறியபோது அவ்ரை இறைவாக்கினராக நாசரேத்து மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயங்கினர். 'நானே வாழ்வு தரும் உணவு' என்று தனது அழிவற்ற தன்மையை விவரித்தபோது அவர் மிதமிஞ்சிப் பேசுகின்றார் என்று கூறி பலர் அவரை விட்டு விலகினார்கள். தனுவுரு எடுத்த இறைப்பிரசன்னத்தை அவர்களால் ஏற்று மதிக்கமுடியவில்லை. இயேசுவின் அநேக அற்புதமான செயல்களைக் கண்டு அவரை ஏதோ வினோதமான செயல்களைச் செய்பவராக மட்டுமே கருதினார்கள். தங்களை மீட்க வந்தவர் என்று அவரை ஏற்றுக் கொள்ள வில்லை. ஏனெனில் அவர்கள் வாழ்வின் அன்றாடங்களில் அடங்கிவிட்ட அடையாளமற்றவராகி விட்டார். எனவே அவர் மேல் அவர்களுக்கு மதிப்பில்லாமல் போய் விட்டது. நற்செய்தி நற்கருணை மற்றும் வழிபாடுகள் போன்றவை நமது அன்றாட வாழ்வில் மிகச் சாதாரண நிகழ்வாகி விட்டதால் இயேசுவை நம் வாழ்வின் மீட்பர் என்று தேட முடியவில்லை. கோயில் பூசாரி கடவுளுக்கு அஞ்சமாட்டான் என்ற நிலைதானா நமது வாழ்வு?

**காவலன்**

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட் களுக்கும் பாரசல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in The Field
இல.13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916, 0777 801038
கொழும்பு: T.P.: 2390128, Fax: 2399650, Mob: 0777 517019

# மட்டு. மாவட்டத்தில் ஸ்திர நிலையை ஏற்படுத்தக் கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைத் தவிர்த்து மீண்டும் மக்களிடையேயும் தமிழீழ விடுதலைப் புலிகளிடையேயும் ஒற்றுமையை வளர்க்கவேண்டும். இதுவே இன்றைய காலகட்டத்தின் முக்கிய தேவையாகும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தின் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதத் தலைவர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட கருணாகர மகேஸ்வரக் குருக்கள், மட்டு - திருமலை ஆயர் வணக்கத்துக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளார், மௌலவி ஏ.ஜே.எம்.ஜி.ஆர்.காசிம் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று வரும் சம்பவங்கள் மனித உரிமைகளை மீறுவதாகவும் மக்களின் வாழ்வுரிமையை கேள்விக் குறிக்கு உள்ளாக்கியும் உள்ளன.

இவ்வாறான சம்பவங்கள் கண்டிக்கத்தக்கன. கொலை மிரட்டல்களையும் வன்முறைச் சம்பவங்களையும் எந்த வகையிலும் யாரும் நியாயப்படுத்தக் கூடாது.

கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தி, அப்பிரதேச மக்கள் அனைவரும் மீண்டும் ஒத்துழைப்புடன் வாழ வழிஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனவும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-63)

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | வெஸ்டர்ன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 222 3214
E.mail: smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி, காரைநகர் T.P: 0602212472
(சி-7311)

## துணைப்படை வீரர் சாவு

(கிளிநொச்சி)

சுகயீனம் காரணமாக துணைப் படை வீரர் ஒருவர் நேற்றைய தினம் சாவடைந்துள்ளார்.

2ம் லெப்டினன் வீரசிங்கம் என்று அழைக்கப்படும் திருநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த சின்னையா வீரசிங்கம் என்ற துணைப் படை வீரரே சாவடைந்தவராவார். (ச)

## குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க செயலகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் குடிநீர் பவுசர்கள் மூலமான குடிநீர் விநியோகத்தைச் செய்ய யாழ் அரச அதிபர் செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அண்மைக்காலமாக யாழ். குடாநாடெங்கிலும் கடும் வரட்சி நிலவி வருகிறது. இதனால் ஊர்காவற்றுறை, வேலணை, காரைநகர், நெடுந்தீவு, புங்குடுதீவு போன்ற தீவகப் பிரதேசங்களிலும் பருத்தித்துறை, சாவகச்சேரி, கோப்பாய், கைதடி ஆகிய பிரதேசங்களிலும் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனால் இப் பகுதி வாழ் மக்கள் குடிநீரைப் பெறுவதில் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர் கொண்டு வருகின்றனர்.

பவுசர்கள் மூலமான குடிநீர் விநியோகங்கள் யாவும் அவ்வப் பிரதேசங்களுக்குரிய பிரதேச சபைகளுக்குச் சொந்தமான பவுசர்கள் மூலமே மேற்கொள்ளப்படவுள்ளன. (உ-19)

## தேர்தல் முறைப்பாடுகளை அறிவிப்பதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் இடம்பெறும் ஒழுங்கீனங்கள் எவையாயினும் அவை குறித்து வாக்காளர்கள் தேர்தல் செயலகத்திற்கு அறிவிக்க வேண்டுமென கேட்கப்பட்டுள்ளது.

வாக்காளர்கள் தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கும்போது இடம்பெற்ற ஒழுங்கீனம், அதற்குக் காரணமானவர்கள், முறைகேடு இடம்பெற்ற வாக்களிப்பு நிலையம், நேரம், வாக்களிப்பு நிலையத்துக்கு பொறுப்பான பொலிஸ் பிரிவு என்பன போன்ற விபரங்களை தெரிவிக்க வேண்டும்.

முறைப்பாட்டைத் தெரிவிக்கும் நபர் தமது பெயர் விபரங்களை வெளியிடவேண்டிய அவசியம் இல்லை. முறைப்பாடுகளை தொலைபேசி மற்றும் தொலைநகல் ஊடாக தெரியப்படுத்த முடியும். 2877609, 2877612, 2877615, 2877618 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும், 2877608, 2877610, 2877611, 2877613 ஆகிய தொலைநகல் இலக்கங்கள் மூலமும் முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும். (ச)

## தேர்தலைக் குழப்பும் நபர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு ஜனாதிபதி அனுமதி

(கொழும்பு)

அண்மைக்காலங்களாக இடம்பெற்றுவரும் தமிழ்க்கட்சி வேட்பாளர்கள் மீதான தாக்குதல்களுக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரே பின்னணியில் இருக்கின்றார்கள் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியிலேயே ஜனாதிபதி இந்தக் குற்றச்சாட்டை விடுத்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் இது குறித்துக் கருத்துக் கூறுகையில்,

தேர்தலைக் குழப்பும் நடவடிக்கையில் ஈடுபடும் எந்தவொரு நபர் மீதும் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி தேர்தல் தினத்தன்று தேர்தல், நடவடிக்கையைக் குழப்ப முயலும் நபர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவுள்ளனர்.

இதேசமயம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உள்ள ஒரு சிலரே வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். எனவே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்ததும் அவ்வாறு வன்முறைகளில் ஈடுபடுவோர்களை இனம் கண்டு அவர்களைத் தவிர்த்து ஏனைய விடுதலைப்புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளார். (உ-60,10)

### 13வது பாராளுமன்ற...

2337 வேட்பாளர்களும் இன்றைய தேர்தலில் களம் இறங்கியுள்ளனர்.

தேர்தல் கடமைகளுக்காக சுமார் ஒரு லட்சத்து 50ஆயிரம் அரச ஊழியர்கள் 64ஆயிரம் பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ள 64ஆயிரம் பொலிஸாருக்கு உதவியாக இணைந்து செயற்படுவதற்கு இராணுவத்தினரும் தயாராகவுள்ளனர்.

வாக்களிப்பு நிலையங்களில் கள்ள வாக்குகள் போட எத்தனிப்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் கடுமையான தண்டணைக்கு உள்ளாக்கப்படுவர். என்றும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 521 வாக்களிப்பு நிலையங்களுக்குமான வாக்குப் பெட்டிகளும் அதற்குரிய உபகரணங்கள் மற்றும் காகிதாதிகளும் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் அந்தந்த வாக்களிப்பு நிலையங்களுக்கு நேற்று எடுத்துச் செல்லப்பட்டது.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேச வாக்காளர்களுக்கு முகமாலை சோதனைச் சாவடியில் சுமார் 61 கொத்தணி வாக்குச் சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன. (ம)

## தேர்தல் சட்டத்தை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

### பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

(கொழும்பு)

இன்று நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலின் போது தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் இந்திராடி சில்வா சகல பொலிசாருக்கும் உத்தரவிட்டுள்ளார்.

இப் பொதுத் தேர்தலில் சுமார் 64 ஆயிரம் பொலிஸாரும் ஏழாயிரம் இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வன்முறைச் சம்பவங்கள் அதிகமாக நடைபெறும் என இனங்காணப்பட்ட பிரதேசங்களில் பாதுகாப்பு நடவடிக்கை பலப்படுத்தப்பட்டுள்ளது. (த)

### தேர்தல் வன்முறைக...

அபகரித்தல் வாக்குப்பெட்டிகளில் வாக்குச் சீட்டுக்களை பலவந்தமாக நிரப்ப முற்படல் மற்றும் வாக்களிப்பு நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது போதல் போன்ற சம்பவங்கள் ஏற்பட்டால் வாக்களிப்பு இரத்துச் செய்யப்பட்டு மறுவாக்குபதிவு மேற்கொள்ளப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் வாக்களிப்பை காலை 7 மணிக்கு ஆரம்பிக்க முடியாது போனாலும் மாலை 4 மணிக்கு முடிக்க முடியாது போனாலும் மற்றும் வாக்குகள் எண்ணும் நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகளை ஒப்படைக்க முடியாது போனாலும் வாக்களிப்பு இரத்துச் செய்யப்படும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா தெரிவித்துள்ளார். (ச)

### மட்டு.போதனா...

சத்திர சிச்சையும் அவசர சிகிச்சைகளும் நடைபெறும் முக்கிய வைத்தியசாலையாக இருப்பதனாலும் வெளிமாவட்ட வைத்தியர்கள் தங்கியிருக்கும் ஒரு வைத்தியசாலையாக இது இருப்பதாலும் மக்கள் பாதிக்கப்படப் போகின்றார்கள் என்ற அச்சம் நிலவுகிறது.

இந் நிலையை நீடிக்க விடாமல் இருப்பதற்காக பொது அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். இந் நிலையில் இன்னமும் இரண்டு மூன்று நாட்களில் நிலைமை சீராகும் என்று நம்புகிறேன் இவ்வாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி என்.தேவராசன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ம)



கோப்பாய் மகா வித்தியாலயத்தில் சமய தீட்சை பெற்ற மாணவர்களுக்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கும் வட மாநில இந்து மாமன்றம் அண்மையில் பாதணிகளை அன்பளிப்பாக வழங்கியது. கனடா வாழ் எம்.ரவிச்சந்திரன் மாணவர் ஒருவருக்கு பாதணிப் பொதி ஒன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம்.



கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் அண்மையில் இடம்பெற்ற "நகைச்சுவை முத்துக்கள்" நூல் வெளியீட்டு விழாவில் நூலின் முதற் பிரதியைப் புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர், நகைச்சுவை மன்றத் தலைவர் கே.அரசரத்தினத்திடம் இருந்து பெற்றுக்கொள்வதையும் அருகில் நூல் ஆசிரியர் சிறிஸ்கந்தராசா நிற்பதனையும் படத்தில் காணலாம்.

புதிய பிரிவு
A/L 2006
(கலை வர்த்தகப் பிரிவு)
ஏப்பிரல் 04
ஞாயிறு காலை 9 மணி
DMI
யாழ்.நகர்
(சி-7481)

நலம்பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்
இந்து கலாசார சமய விவகார அலுவல்கள் அமைச்சின் அமைச்சராக இருந்து அரும் பணியாற்றிய
உயர்திரு தி. மகேஸ்வரன்
அவர்கள் ஈனர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயம் அடைந்தததையிட்டு நாம் மிக வேதனை அடைகின்றோம் இச் சம்பவத்தை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.
இவர் விரைவில் பூரண குணம் அடைந்து தேர்தலில் அமோக வெற்றி பெற்று மக்கள் சேவை தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
தாமரை வீதி
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்
வண்ணை கோட்டையம்பதி
ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தான நிர்வாக சபையினரும் மக்களும்
(8477)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.04.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.